Follow us

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 83 சுபகிருது வருடம், புரட்டாசி மாதம் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை
(14.10.2022) ஹிஜ்ரி 1444, ரபிஉல் அவ்வல் - 17 0115886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50

## யாழில் கள்ளு தேடி அலைந்த அமைச்சர்



•யாழ். செய்தியாளர்

பனை அபிவிருத்தி சபையின் யாழ்ப்பாண தலைமை காரியாலய கட்டடத்தொகுதி திறப்பு நிகழ்வில் கலந்துகொள்வதற்காக யாழ்ப்பாணத்திற்கு நேற்று வருகை தந்த பெருந்தோட்டத்துறை இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, யாழில் பனங்கள்ளு குடிப்பதற்கு அலைந்ததாக தெரிவித்தார். அந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது, 02 பக்கம்

## டெங்கு நோயாளர்கள்!

02 பக்கம்

# பட்ஜெட்டுக்குப் பின் புதிய அமைச்சரவை!

## ஜனாதிபதி ரணில் திட்டவட்டம்

## பொதுஜன பெரமுனவுக்கும் அறிவிப்பு

02 பக்கம்

## ஆடு, மாடு ஏப்பம் விட்டால் வரி



### நியூசிலாந்தில் புதிய சட்டம்

10 பக்கம்

## மைத்ரி, தயாசிறிக்கு அழைப்பாணை

முன்னாள் ஜனாதிபதியும் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்ரிபால சிறிசேன மற்றும் அக்கட்சியின் செயலாளர் தயாசிறி ஜயசேகர ஆகியோரை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவினால் தாக்கல்செய்யப்பட்ட மனு தொடர்பில் எதிர்வரும் 19ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் தாம் வகிக்கும் சகல பதவிகளிலிருந்தும் தன்னை நீக்கும் தீர்மானத்துக்கு எதிராக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தாக்கல் செய்த மனுவை பரிசீலித்த நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவின் தீர்மானத்திற்கு எதிராக செயற்பட்டதால், தற்போதைய அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை ஏற்றுக்கொண்ட கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை கட்சியின் அனைத்து பதவிகளிலிருந்தும் நீக்குவதற்கு கடந்த செப்டெம்பரில் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்தமை குறிப்பிடத்தக்கது.

### கனவரெல்ல தொழிலாளி பலியான சம்பவம்;

## சடலம் நேற்றும் தொழிற்சாலையில்

### அதிகாரியொருவர் கைது

•நா. தினுஷா

பதுளை, கனவரெல்ல தோட்டத் தொழிலாளி உயிரிழந்த சம்பவம் தொடர்பில் அந்த தொழிற்சாலையின் அதிகாரியொருவர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கனவரெல்ல தோட்டத் தொழிலாளியான தமிழரசன் கணேசமூர்த்தியின் மரணத்துக்கு நீதிகோரி, அவரின் பூதவுடல்... 02 பக்கம்



படப்பிடிப்பு: பிரதீப் தம்பரகே

## சனத் நிஷாந்தவுக்கு நீதிமன்று கடும் தொனியில் எச்சரிக்கை

### பிடியாணை பிறப்பிக்கப்பட்டு சரணடைந்ததன் பின்னர் விடுதலை

•யோ.தர்மராஜ்

நீதிமன்ற அவமதிப்பு வழக்கு விசாரணைக்கு நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டும் ஆஜராகாத நிலையில், இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டதையடுத்து, அவர் நீதிமன்றில் சரணடைந்தார். அதன்பின்னர் கடும் எச்சரிக்கையில் அவர் விடுவிக்கப்பட்டார்.

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டு தொடர்பில் நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவுக்கு எதிரான வழக்கு விசாரணைக்கு... 02 பக்கம்

## தேர்தலை ஒத்திவைக்கும் முயற்சிக்குப் பாரிய எதிர்ப்பு

### ஓரணியில் திரண்ட எதிர்க்கட்சிகள்



02 பக்கம்

## பெசிலே எங்களை வழிநடத்துகிறார்!



### அம்பலப்படுத்தினார் கோப் தலைவர் ரஞ்சித் பண்டார

•யோ.தர்மராஜ்

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பெசில் ராஜபக்ஷவே கட்சியின் விவகாரங்களில் பெரும்பாலான வழிநடத்தலை முன்னெடுப்பதாக அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் கோப் குழுத் தலைவருமான பேராசிரியர் ரஞ்சித் பண்டார தெரிவித்துள்ளார். 02 பக்கம்

### கமெண்ட் கந்தர்..

உந்த ராஜபக்ஷ ஆக்களிட்ட மாதிரி ரணிலிட்ட இலேசில எதையும் எடுக்கேலாது போலக் கிடக்குது... கெபினெட் எப்பொய்ன்ட்மென்ட் பார்த்தீங்கள் தானே... அந்தாள் வைக்கிறதுதான் சட்டம்..



### மண்ணெண்ணெய்க்கு

## மீண்டும் தட்டுப்பாடு

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டுள்ளதன் காரணமாக நாட்டில் மண்ணெண்ணெய்க்கு பாரிய தட்டுப்பாடு ஏற்படும் நிலைமை உருவாகியுள்ளது. இதனால் மீண்டும் மோசமான பாதிப்பு உருவாகுமென பெற்றோலியக் கூட்டுத்தா பனத்தின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

நாட்டில் ஒருநாளில் 450 முதல் 500 மெற்றிக் தொன் வரை மண்ணெண்ணெய் தேவைப் படுகிறது. 02 பக்கம்

## பொதுமக்கள் கருத்துகளுக்கு டிஜிட்டல் தளம் உருவாக்கம்

### பொருளாதார ஸ்திரத்தன்மைக்காக தேசிய பேரவையின் உப குழு நடவடிக்கை



பொருளாதார ஸ்திரத்தன்மைக்காக குறுகிய மற்றும் நடுத்தர கால நிகழ்ச்சித்திட்டங்களை அடையாளம் காண்பதற்கான தேசிய பேரவையின் உப குழுவுக்கு பொதுமக்கள் கருத்துகளை பெற்றுக்கொள்ள டிஜிட்டல் தளம் உருவாக்கப்படும் - என குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க நேற்று தெரிவித்தார். 02 பக்கம்

## ஐ.நாவில் உக்ரைன் விவகாரம்

## ரஷ்யாவுக்கு எதிரான தீர்மானத்தில் வாக்களிப்பைத் தவிர்த்தது இலங்கை

10 பக்கம்



### உஷ்

நீர் வடிகாலமைப்பு, பெருந்தோட்ட அபிவிருத்தி அமைச்சு என்ற புதிய அமைச்சொன்றை உருவாக்க பணித்துள்ளாராம் ஜனாதிபதி. அமைச்சரவை மறுசீரமைப்பின்போது இந்த அமைச்சு ஜீவன் தொண்டமான் எம்.பிக்கு வழங்கப்படவுள்ளது.

நீர் வழங்கலுக்கு இப்போது பொறுப்பாக இருக்கும் கெஹேலிய இதனால் அதிருப்தியடைந்துள்ளாரென தகவல்கள் சொல்கின்றன.



## மின்னல் தாக்கியதில் 11 மாடுகள் உயிரிழப்பு

### வவுனியாவில் சம்பவம்

06 பக்கம்

## திலினியின் மற்றுமொரு கொள்ளை வெளியானது

### எரிபொருள் கொள்வனவுக்காக பல கோடி டொலர் மோசடி

•யோ.தர்மராஜ்

பிரமுகர்கள் பலரிடம் கோடிக்கணக்கில் பண மோசடி செய்துள்ள குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள திலினி பிரியமாலி, இலங்கையில் எரிபொருள் நெருக்கடி ஏற்பட்டபோது, நாட்டுக்குத் தேவையான எரிபொருளை இறக்குமதிசெய்யும் முகவராக காட்டிக்கொண்டு வர்த்தகர்களிடம் பல கோடி டொலர்களை மோசடி செய்துள்ளதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு எரிபொருளை இறக்குமதிசெய்யும் முகவராக அரசாங்கத்தினால் தான் நியமிக்கப் பட்டுள்ளதாகவும்,... 02 பக்கம்

## பொதுமக்கள்...

உப குழுவுக்கான நிபுணத்துவ கருத்துகளை பெற்றுக்கொள்ளும் நோக்கில் நாடாளுமன்றத்தில் நேற்று கூடியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டத்தில் இலங்கை மத்திய வங்கி மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகள் மற்றும் பேராசிரியர் ரொஹான் சமரஜீவ ஆகியோர் கலந்துகொண்டதுடன், நாட்டின் தற்போதைய கடன் நிலைமை மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடன் செயற்படும் போது ஏற்படும் கொள்கை ரீதியான நிலைமைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

இங்கு இலங்கை மத்திய வங்கியின் பொதுக் கடன்கள் திணைக்களத்தின் கலாநிதி எம்.இஸட்.எம்.ஆஸீம் கருத்துத் தெரிவிக்கும் போது, எதிர்வரும் ஜனவரி மாதத்துக்குள் தற்போதைய நிலைமையில் சில ஆறுதலான மாற்றங்கள் ஏற்படும் என்று தெரிவித்தார்.

பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்து வதற்கு டொலருக்கு ஒப்பீட்டளவில் ரூபாவை பேணுதல், வரிகளை அதிகரித்தல், இறக்குமதிக்குக் கட்டுப்பாடு விதித்தல் போன்ற விடயங்களால் ஏற்படும் சமூக அழுத்தம் தொடர்பில் இதன்போது குழு கவனம் செலுத்தியது. இந்த நிலைமைக்கு ஒப்பீட்டளவில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்கள் வீழ்ச்சியடைத்தல், வேலையின்மை அதிகரித்தல், வறுமை அதிகரித்தல் போன்ற விடயங்கள் காரணமாக ஏற்படும் சமூக சிக்கல்கள் தொடர்பிலும் குழுவின் அவதானம் செலுத்தப்பட்டது.

இதன்போது இலங்கையில் குடும்பங்கள் தொடர்பான ஆய்வை உடனடியாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு குழுவின் தலைவர் நிதி அமைச்சு மற்றும் தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்துக்கு அறிவித்தார்.

இந்த ஆய்வு மூன்று வருடங்களாக மேற்கொள்ளப்படவில்லை என்பதால் ஆய்வை மேற்கொள்வதன் மூலம் சமூக வீழ்ச்சியை புரிந்துகொண்டு எதிர்காலக் கொள்கைகளை தயாரிப்பது மிகவும் பொருத்த மானது என குழுவின் தலைவர் தெரிவித்தார்.

இதேவேளை, அரசாங்கத்தினால் சர்வதேச நாணய நிதியத்துடன் தற்போது மேற்கொள்ளும் கலந்துரையாடல்கள் காரணமாக எந்தவகையிலாவது அழுத்தத்துக்கு உள்ளாகும் பல துறைகள் தொடர்பிலும் கடன் ஸ்திரத்தன்மையுடன் தொடர்புடைய பிரேரணைகள் அடங்கிய விரிவான அறிக்கையொன்றையும் டிசம்பர் மாதத்துக்குள் முன்வைப்பதற்கு குழுவினால் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி, நாடாளுமன்ற உறுப்பினர் எம். ராமேஷ்வரன் மற்றும் நாடாளுமன்ற உதவிச் செயலாளர் டிகிரி கே.ஜயதிலக்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

## மண்ணெண்ணெய்க்கு...

ஆனபோதும், நாளொன்றில் 50 மெற்றிக் தொன் மண்ணெண்ணெய் மாத்திரமே சந்தைக்கு விநியோகிக்கப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதன் காரணமாக சுத்திகரிக்கப்பட்ட மண்ணெண்ணெயை இறக்குமதிசெய்ய வேண்டிய தேவை உருவாகியுள்ளதாக பெற்றோலிய கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்தன.

## கனவரெல்ல தொழிலாளி...

கனவரெல்லை தோட்டத் தேயிலை தொழிற்சாலைக்கு நேற்று முன்தினம் (12) கொண்டுவரப்பட்டு நேற்று மதியம் வரை அங்கு அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், குறித்த தொழிற்சாலையின் நிர்வாக அதிகாரி நமுனுகல பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டதை அடுத்து, நேற்று (13) சடலம் மீண்டும் அவரின் வீட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கனவரெல்ல, ஈ.ஜி.கே. தோட்டத்தில் தொழில் புரிந்து வந்த இளைஞர் தோட்ட தொழிற்சாலை அதிகாரியின் குடியிருப்புக்கு நீர்க் குழாய் திருத்துவதற்காக சென்றவேளை மின்சாரம் தாக்கி கடந்த ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்தார்.

அதற்கு நியாயம் கோரி தோட்ட மக்கள் தொடர்ச்சியாக போராட்டங்களை முன்னெடுத்து வந்தனர்.

இந்நிலையில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் தலையிட்டு, 90 இலட்சரூபா நட்ட ஈடு தோட்டக் கம்பனியால் வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தியிருந்தார்.

அதற்கு நிர்வாகம் மறுப்புத் தெரிவித்ததன் காரணமாக, உயிரிழந்தவரின் சடலம் தொழிற்சாலையில் வைக்கப் பட்டது.

இவ்வாறு பூதவுடல் தொழிற்சாலையில் வைக்கப்பட்டதை அடுத்து முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளை அடுத்தே, தொழிற்சாலை அதிகாரி நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

அதிகாரி கைதுசெய்யப்பட்டதை யடுத்து சடலம் தொழிற்சாலையிலிருந்து மீண்டும் வீட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இதன்போது கைதுசெய்யப்பட்டுள்ள அதிகாரி இன்று (14) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளதுடன், நீதிமன்றத்தின் இறுதி தீர்மானத்துக்கயை சடலத்தை அடக்கம் செய்வது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

## திலினியின் மற்றுமொரு...

நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் நெருக்கடியால் நாட்டுக்கு தேவையான எரிபொருளை இறக்குமதி செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக கூறியே இவர் பல வர்த்தகர்களை ஏமாற்றியுள்ளதாகவும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

மேலும், எரிபொருள் இறக்குமதி செய்வதற்கு தனக்கு டொலர்களை தருமாறு கோரியுள்ளதுடன், இலங்கைக்கு எரிபொருள் இறக்குமதி செய்த பின்னர் அதனை விற்பனை செய்து அதிக இலாபம் ஈட்ட முடியும் எனவும் கூறியே திலினி பிரியமாலி பல வர்த்தகர்களை ஏமாற்றியுள்ளதாக குற்றப்புலனாய்வு திணைக்களம் முன்னெடுக்கும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இதேவேளை, சிறைச்சாலையில் தொலைபேசியை பயன்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் சந்தேக நபராக இருக்கும் திலினி பிரியமாலி நேற்று சிறைச்சாலை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளதாக சிறைச் சாலைகள் மேலதிக ஆணையாளர் நாயகம், ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார். சிறைச்சாலை விதிகளின் கீழ் தடைசெய்யப்பட்ட பொருளான கையடக்கத் தொலைபேசியை வைத்திருந்தமைக்காக கொழும்பு மேலதிக மாவட்ட நீதிபதி தலைமையிலான சிறைச்சாலை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வெலிக்கடை சிறைச்சாலையின் மகளிர் பிரிவிலிருக்கும் திலினி பிரியமாலியிடமிருந்து கடந்த 6 ஆம் திகதி கையடக்கத் தொலைபேசி ஒன்று மீட்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.




## யாழில் கள்ளு தேடி...

சுமார் 45 வருடகாலமாக வாடகை வீட்டில் செயல்பட்டு வந்த பனை அபிவிருத்தி சபைக்கு இன்றைய தினம் (நேற்று) ஒரு புதிய கட்டடம் திறந்து வைக்கப் பட்டவை மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது.

பனை அபிவிருத்தி சபையின் தலைவரின் முயற்சியின் பயனாக இன்றைய தினம் சொந்த கட்டடத்தில் நீங்கள் குடியேறுவதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இங்கே பனைசார் உற்பத்தி பொருட்களின் செயற்பாடு அதிகம் காணப்படுகின்றது.

பல்லாயிரக்கணக்கான பனை மரங்கள் உள்ள இடமாக வடபகுதி காணப்படுகின்றது.

இன்று காலை நாங்கள் வந்து பனங்கள்ளு தேடிய போது யாழ்ப்பாணத்தில் பனங்கள்ளு இல்லை. இங்கே உற்பத்தி செய்யப்படும் பனை உற்பத்தி பொருட்களுக்கு மேற்குலக நாடுகளில் அதிக கேள்வி காணப்படுகின்றது,

வடபகுதி மக்களுக்கு பல பிரச்சினைகள் காணப்படுவது அனைவருக்கும் தெரியும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டுதலின் கீழ் மக்களுக்குரிய பிரச்சினைகளை தீர்ப்பதற்குரிய வழிமுறைகளை நாங்கள் முன்னெடுப்போம்.

மக்கள் ஒருபோதும் மஹிந்த ராஜபக்ஷவை வீட்டுக்கு செல்லுமாறு போராட்டம் நடத்த வில்லை. அவர் மீண்டும் பிரதமராகலாம்.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மக்களின் எதிர்ப்பினால் சற்று விலகி இருக்கிறாரே தவிர அவரை வீட்டுக்குச் செல்லுமாறு மக்கள் கோரவில்லை. அவ்வாறான நிலையில், அவர் மீண்டும் பிரதமராக வருவதில் எந்த பிரச்சினையும் கிடையாது. நாடாளுமன்றத்தில் உரிய முறையில் தெரிவு இடம்பெறும்போது அவர் மீண்டும் பிரதமராக வரக்கூடிய சாத்தியகூறு காணப்படுகிறது. எனினும், தற்போதுள்ள பிரதமருக்கு நாங்கள் முழுமையான ஆதரவினை வழங்கி வருகின்றோம் என்றார்.

## தேர்தலை ஒத்திவைக்கும்...

**யோ.தர்மராஜ்**

தேர்தல் முறைமையில் திருத்தம் அல்லது வேறு ஏதேனும் காரணத்தை அடிப்படையாகக் கொண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைப்பதற்கு அரசாங்கம் எடுக்கும் முயற்சியை தோற்கடிக்க அனைத்து எதிர்க்கட்சிகளும் தீர்மானித்துள்ளன.

சுதந்திர மக்கள் காங்கிரஸ் தலைமையில் நேற்று இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின்போதே அனைத்து எதிர்க்கட்சிகளும் இணைந்து இந்த தீர்மானத்தை எடுத்துள்ளன.

தேர்தல் ஒத்திவைக்கும் வகையில் ஜனாதிபதியினால் கடந்த நாட்களில் தெரிவிக்கப்பட்ட கருத்துகள் குறித்து அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் எதிர்க்கட்சியிலுள்ள தரப்பினருடனும் விசேட கலந்துரையாடலை முன்னெடுப்பதற்கு சுதந்திர மக்கள் காங்கிரஸ் தீர்மானித்திருந்தது. அதற்கமைய, இந்த கலந்துரையாடல் நேற்று முன்தினம் ஜயவர்தனபுரவில் இடம்பெற்றன.

இக் கலந்துரையாடலில் ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தேசிய சுதந்திர முன்னணி, புதிய இடதுசாரி முன்னணி, 43 ஆவது படையணி, தமிழ் தேசிய கூட்டமைப்பு, பிவித்துரு ஹெல உறுமய, ஸ்ரீலங்கா மக்கள் கட்சி, லங்கா சம சமாஜ கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், நவலங்கா சுதந்திரக் கட்சி, ஜனநாயக மக்கள் முன்னணி, விஜயதரணி ஜனதா சபாவ, முன்னிலை சோஷலிஸ்ட் கட்சி ஆகியன கலந்துகொண்டன.

இதன்போது, தேர்தல் சீர்திருத்தம் என்ற போர்வையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைக்க அரசாங்கம் முயற்சித்தால், தனித்தனியாகவும் கூட்டாகவும் கடுமையான எதிர்ப்பை தெரிவிக்க வேண்டும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், அந்தந்த கட்சிகள் மற்றும் ஏனைய குழுக்களும் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கையை விரைவில் எடுக்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தினால் எடுக்கப்படும் தீர்மானத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும், இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைக்கும் நடவடிக்கையை தோற்கடிக்க கட்சித் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

மேலும், ஜனநாயகத்திற்கு எதிராக மேற்கொள்ளப்படும் இத்தகைய நடவடிக்கைகளுக்கு எதிராக கூட்டறிக்கை ஒன்றை வெளியிடவும், சமயத் தலைவர்கள், சிவில் அமைப்புகள் மற்றும் தொழில் நிபுணர்களை தனித்தனியாக சந்தித்து தெளிவுபடுத்துவதும், இது தொடர்பாக சர்வதேசத்திடம் எடுத்துக்கூறவும் கட்சித் தலைவர்களிடையே இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது.

## 59,000 டெங்கு ...

**யோ.தர்மராஜ்**

நாட்டில் இவ்வருடத்தின் நேற்று முன்தினம் வரையான காலப்பகுதியில் 59 ஆயிரத்துக்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. டெங்கு பரவும் அபாயத்தை கருத்தில் கொண்டு நாட்டிலுள்ள 36 சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவை அதிக அவதானமிக்க பகுதிகளாக அடையாளப் படுத்துவதற்கும் சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

நாட்டில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை யால் கடந்த வாரத்தில் மாத்திரம் ஆயிரத்து 200 இற்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

டெங்கு பரவலினால் இவ்வருடத்தில் இதுவரையில் 59 ஆயிரத்து 317 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள தாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

எனினும், கடந்த வருடத்தில் முதல் 10 மாதங்களுக்குள் 19 ஆயிரத்து 912 டெங்கு நோயாளர்களே அடையாளம் காணப்பட்டிருந்தனர். அதன்படி, கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது இவ்வருடம் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மும்மடங்காக அதிகரித்துள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்வருடம் மேல் மாகாணத்திலுள்ள கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை ஆகிய மூன்று மாவட்டங்களிலேயே அதிகமான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்தோடு, கண்டி, காலி, யாழ்ப்பாணம், குருநாகல், புத்தளம் மற்றும் கேகாலை மாவட்டங்களிலும் அதிகமான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். டெங்கு பரவும் அபாயத்தை கருத்தில் கொண்டு, நாட்டிலுள்ள 36 சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளை அதிக அவதானமிக்க பகுதிகளாக பெயரிடுவதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதேவேளை, நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையால் டெங்கு பரவும் அபாயம் மேலும் அதிகரிக்கும் என்பதால், பொது மக்கள் மிக அவதானத்துடன் செயற்படுமாறும் சுகாதார அமைச்சு கோரிக்கைவிடுத்துள்ளது.

## சனத் நிஷாந்தவுக்கு ...

நீதிமன்றில் நேற்று ஆஜராகுமாறு முன்னதாக அழைப்பாணை விடுக்கப்பட்டிருந்த போதிலும், அவர் முன்னிலையாகியிருக்கவில்லை. இதனையடுத்து, அவரை கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் பொலிஸ் மா அதிபருக்கு உத்தர விட்டது.

நீதித்துறையை குறிவைத்து வெளியிட்ட அவமதிப்புக் கருத்து தொடர்பில் சனத் நிஷாந்த வுக்கு எதிராக குற்றச்சாட்டு முன்வைக்கப் பட்டுள்ளது. நீதிமன்றத்தை அவமதித்தமைக்காக ஏன் தண்டிக்கப்படக் கூடாது என்பதற்கான காரணத்தை மன்றில் முன்வைப்பதற்காக நேரில் ஆஜராகுமாறு இராஜாங்க அமைச்சருக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் முன்னதாக அழைப்பாணை அனுப்பியிருந்தது.

நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்திற்காக இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவை தண்டிக்க உத்தர விடுமாறு கோரி நாட்டிலுள்ள அனைத்து மாவட்ட நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் நீதவான்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பான இலங்கை நீதிச் சேவை சங்கம் மற்றும் இரண்டு சட்டத்தரணிகள் மனு தாக்கல் செய்தனர். மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான நிஸங்க பந்துல கருணாரத்ன மற்றும் ஆர்.குருசிங்க ஆகிய இரு நீதிபதிகள் அடங்கிய குழு முன்னிலையில் நீதிமன்ற அவமதிப்பு மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது இராஜாங்க அமைச்சர் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருக்கவில்லை.

இலங்கை நீதிச் சேவை சங்கம் சார்பாக ஆஜராகியிருந்த, ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா, பிரதிவாதியை கைதுசெய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கான பிடியாணை ஒன்றை பிறப்பித்து உத்தரவிடுமாறு மன்றில் கோரிக்கைவிடுத்தார்.

அதேபோன்று, மற்றொரு மனுதாரர் சார்பாக ஆஜராகியிருந்த சட்டத்தரணி உபுல் ஜயசூரிய பிசி, பிரதிவாதியை கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறும் அவருக்கான பிணையை நிராகரிக்குமாறு கோரியிருந்தார்.

இதேவேளை, மற்றொரு மனுதாரர் சார்பாக ஆஜராகியிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ், இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவை கைதுசெய்வதற்கான பிடியாணை ஒன்றை பிறப்பிக்குமாறு கோரிக்கை விடுத்தார்.

எவ்வாறாயினும், இராஜாங்க அமைச்சர் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி பைஸர் முஸ்தபா, விண்ணப்பங்கள் தொடர்பில் எவ்வித அழைப்பாணையும் கிடைக்கவில்லை என நீதிமன்றில் சுட்டிக்காட்டினார். எவ்வாறாயினும், நீதிமன்றினால் பிறப்பிக்கப்பட்ட பிடியாணை, பதிவுத் தபாலில் அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளதாக மனுதாரர்கள் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா மற்றும் உபுல் ஜயசூரிய பிசி மற்றும் சாலிய பீரிஸ் ஆகியோர் நீதிமன்றில் சுட்டிக்காட்டினர்.

இதனையடுத்து, இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவை கைதுசெய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் பொலிஸ் மா அதிபருக்கு உத்தர விட்டது. ஆனால், பிடியாணை பிறப்பிக்கப்பட்டு சில நிமிடங்களில் தனது சட்டத்தரணிகள் ஊடாக இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த நீதிமன்றில் ஆஜரானார். இதனையடுத்து, இராஜாங்க அமைச்சர் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணி, பிறப்பிக்கப்பட்ட பிடியாணையை இரத்துச் செய்யுமாறு வலியுறுத்தி மனுவொன்றை தாக்கல் செய்தனர்.

இந்நிலையில், நீதிமன்ற அவமதிப்பு குறித்த மூன்று வழக்குகள் தொடர்பில் நீதிமன்றில் சரணடைந்ததையடுத்து, இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த விற்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட பிடியாணையை மீளப்பெறுவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித் ததோடு, கடும் எச்சரிக்கையில் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த விடுவிக்கப்பட்டார்.

## பட்ஜெட்டுக்குப் பின்...

**நமது விசேட செய்தியாளர்**

அமைச்சரவையை மேலும் விஸ்தரிக்கும் செயற்பாடு, இவ்வருட இறுதியில் அதாவது வரவு-செலவுத் திட்டம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப் பட்டு நிறைவேற்றப்பட்ட பின்னரே இடம்பெறுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான தனது நிலைப்பாட்டை விளக்கி ஜனாதிபதி ரணில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமைப்பீடத்திற்கு தகவல் அனுப்பியுள்ளதாக ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

நாட்டின் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளும் வகையில் கடன்களை பெறுவதற்கு, சர்வதேச நாணய நிதியத்தின் சில கோரிக்கைகளை நிறைவேற்றவேண்டியுள்ளதால் அதுவரை அமைச்சரவையில் மாற்றங்களை செய்யப்போவதில்லை யென ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

பட்ஜெட்டுக்குப் பின்னர் அமையும் அமைச்சரவையில் தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளின் தலைவர்களை உள்ளடக்கி தேசிய அரசு அடிப்படையிலான அமைச்சரவை அமைக்கப்படுமெனவும் ஜனாதிபதி ரணில் கோடிக் காட்டியிருப்பதாக அறியமுடிந்தது.

## பெசிலே எங்களை...

அத்தோடு, கட்சியின் விவகாரங்கள் தொடர்பில் பெசில் ராஜபக்ஷவுக்கு எவராலும் சவால் விட முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

பெசில் ராஜபக்ஷவே இக்கட்சியை ஸ்தாபித்தார். எனவே, இந்தக் கட்சியின் செயற்பாடுகளை மேற்கொள்ள பெசில் ராஜபக்ஷவுக்கு எந்த அதிகாரமும் இல்லையா? கட்சி விவகாரங்களில் தலையிட வேண்டும். யாருக்கும் தேவையில்லாததை பெசில் ராஜபக்ஷ முன்னெடுப்பதில்லை. கட்சிக்கும் உறுப்பினர்களுக்கும் தேவையானதையே அவர் முன்னெடுப்பார்.

அதனைவிடுத்து, ஒவ்வொருவருக்கும் விரும்பியதை இந்த கட்சி முன்னெடுக்காது. 2016 ஆம் ஆண்டு எங்களுடைய ஆடைகளை களைந்துவிட்டு வீதியில் விரட்டியடிப்பதாகக் கூறினர். ஆனால், பெசில் ராஜபக்ஷ இந்தக் கட்சியை ஆரம்பித்தார். வலுவான கட்சியாக மாற்றினார். எனவே அரசியல் ரீதியாக பெசில் ராஜபக்ஷவின் பங்களிப்பை யாராலும் மரணிக்கச் செய்ய முடியாது. சிலர் கூறுவது போன்று, பெசில் ராஜபக்ஷ, திரைக்குப் பின்னாலிருந்து கட்சியை வழிநடத்தவில்லை. அவர் திரைக்கு முன்னால் இருந்தே வழிநடத்துகின்றார். சவால்களுக்கு நாங்கள் முகம் கொடுப்போம்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவே தற்போது இந்த நாட்டில் பலம் வாய்ந்த கட்சியாக இருக்கின்றது. இந்த நாட்டின் நாடாளுமன்றத்தையும் நாங்கள் வழிநடத்துகின்றோம். தற்காலிகமான பின்னடைவை சந்தித்தோம். அது எங்களுடைய தவறு எனக் கூற முடியாது. போராட்டத்தின் பின்னணியில் யார் இருக்கிறார்கள் என்பது தற்போது நாட்டு மக்களுக்கு தெரியவந்துள்ளது. களுத்துறையில் இருந்து புதிய பயணத்தை தொடங்கியுள்ளோம். 16 ஆம் திகதி கண்டிக்கு வருவோம் - என்றார்.

# திகோ குழுமத்தின் பணிகள் வழமைபோல் இடம்பெறும்!

## நிறுவனத்தின் ஊடகப் பேச்சாளர்கள் அறிவிப்பு



திகோ நிறுவனத்தில் இடம்பெற்றதாக குறிப்பிடப்படும் நிதி மோசடி தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. அதற்கு, எங்களால் முடிந்த அனைத்துவித ஒத்துழைப்புகளையும் வழங்கி வருகிறோம். ஆனால், நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு எதுவிதத் தடங்கலும் இல்லை. வழமைபோல் தமது பணிகளை முன்னெடுத்து வருவதாக திகோ குழுமத்தின் ஊடகப் பேச்சாளர்கள் தெரிவித்தனர்.

நிதி மோசடிக் குற்றச்சாட்டு தொடர்பில் விளக்கமறியலில் ரிமானட் சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள திலினி பிரியமாலிக்கு சொந்தமான திகோ குழுமத்தின் பணியாளர்களிடம் வாக்குமூலம் பதிவுசெய்யும் பணிகள் நேற்று ஆரம்பமாகியிருந்தன.

இந்நிலையில், குற்றவியல் விசாரணை திணைக்களத்தில் நேற்று (13) வாக்குமூலம் பதிவு செய்யததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டனர்.

திகோ குழுமத்தின் ஊடகப் பேச்சாளர் சுரங்கி கொடிதுவக்கு இது குறித்து தெரிவிக்கையில்,

தற்போது இடம்பெற்றுள்ள சம்பவம் அனைவரும் அறிந்ததே. இந்தச் சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் பதிவுசெய்வதற்காக திகோ நிறுவனத்தின் பணியாளர்களுக்கு குற்றவியல் விசாரணைத் திணைக்களம் அழைப்பு விடுத்துள்ளது. எங்களின் கடமைகளிலிருந்து நாங்கள் விடுபடவில்லை.

அன்றிலிருந்து எங்களின் கடமைகளையே முன்னெடுத்து வந்தோம். செயற்பாடுகளை தொடந்தும் முன்னெடுத்து செல்லுமாறு நிறுவன தலைவர் எங்களுக்கு கடுமையாக அறிவித்துள்ளார். அதேபோன்று, திகோ நிறுவனம் முழுமையாக மூடப்பட்டுவிட்டதாக சமூக வலைத்தளங்களில் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. அந்த கருத்துகளில் உண்மைத் தன்மை இல்லை. வழமைபோல் நிறுவனப் பணிகள் இடம்பெற்று வருகின்றன என்றார்.

திகோ குழுமத்தின் மற்றொரு ஊடகப் பேச்சாளர் தனஞ்சய நாணயக்கார தெரிவிக்கையில்,

நிறுவனத்தில் பணிகள் இடம்பெறும் முறைகள் மற்றும் வேறுசில செயற்பாடுகள் தொடர்பாக தரவுகள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்கு தகவல்கள் அவசியம் என்பதால் இந்த தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று விசாரணைகளுக்குத் தேவையான சகலவித ஒத்துழைப்புகளையும் குற்றவியல் விசாரணைத் திணைக்கள அதிகாரிகளுக்கு பெற்றுக் கொடுத்திருந்தோம். இந்த நிதி நிறுவனத்தில் நிதி முதலீடு செய்ததாக குறிப்பிட்டு 30 பேர் வரையானவர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. ஆனால், அந்தப் பட்டியல் தொடர்பில் எங்களுக்கு எதுவும் தெரியாது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்கள் குறித்தும் எனக்கு தெரியாது. ஒரு சிலர், தம்மை பிரசித்தப்படுத்திக் கொள்வதற்காக இந்த விடயத்தை பிரபல்யப்படுத்திவிட்டார்கள் என்றார்.

# எரிக் சொல்ஹெய்மிற்கும் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்குமிடையில் சந்திப்பு

நோர்வேயின் முன்னாள் அமைச்சரும் இலங்கைக்கான முன்னாள் சமாதான தூதுவருமான எரிக் சொல்ஹெய்மிற்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று (13) இடம்பெற்றுள்ளது.



இந்த சந்திப்பில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன் மற்றும் இரா.சாணக்கியன் ஆகியோரை சந்தித்துப் பேசியதாக எரிக் சொல்ஹெய்ம் தனது ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

"நாடாளுமன்ற உறுப்பினர்களும் பழைய நண்பர்களுமான எம்.ஏ. சுமந்திரன் மற்றும் இராசமாணிக்கம் சாணக்கியன் ஆகியோருடன் கொழும்பில் சந்தித்து உரையாடியிருந்தேன்" என அவர் தனது ட்விட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடி தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டிருந்ததாக குறிப்பிடப்படுகின்றது. அத்துடன், பொருளாதார மீட்சி, பசுமையான அபிவிருத்திகள் மற்றும் அரசியல் சீர்திருத்தம் தொடர்பில் ஆராயப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## கருத்து கந்தசாமி



எரிக் சொல்ஹெய்ம் ஐயா மஹிந்த ராஜபக்ஷவை சந்திச்ச நேரம், என்ன இவ்வளவு இளமையா இருக்குறீங்கள் எண்டு பகிடி விட்டாராம்...

சாதாரணமா ஒருத்தன் வெயிலில அலைஞ்சு கறுத்துப்போனா... என்ன இவ்வளவு வெள்ளையா இருக்கிறியள் எண்டு கேட்பாங்களே..! அப்படி ஒரு பகிடியாத்தான் வயதுபோய் தளர்ந்து நிக்கிற மஹிந்தவைப் பார்த்து சொல்ஹெய்ம் கேட்டிருக்கக் கூடும்... தமிழில அதை குசும்புத்தனம் எண்டு சொல்லுவார்கள்...

சண்டை நடக்கிற காலத்தில வெளிநாட்டு ஆட்களை மஹிந்த எடுத்தெறிந்து பேசிய பல சம்பவங்கள் உள்ளன. அப்போது அவர் ஜனாதிபதி. இப்ப ஒன்றுமில்லாத ஒரு சாதாரண அரசியல்வாதி... மஹிந்தவை சந்திச்ச நேரம் சொல்ஹெய்முக்கு பழைய நினைவெல்லாம் வந்துபோயிருக்கும்..!




தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, ஒக்டோபர் 14ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# நோபல் வெற்றியாளர்களிடம் கற்க வேண்டிய பெரும் பாடம்

மருத்துவம், இலக்கியம் மற்றும் அமைதி என நோபல் பரிசுகள் அறிவிக்கப்பட்ட நிலையில், கடந்த திங்கட்கிழமை (ஒக்.10) பொருளாதாரத்துக்கான நோபல் பரிசுகள் அறிவிக்கப்பட்டன.

அந்த வகையில் பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு, அமெரிக்க பொருளாதார வல்லுநர்கள் பென் பெர்னான்க், டக்ளஸ் டயமண்ட் மற்றும் பிலிப் டைப்விக் (Ben Bernanke, Douglas Diamond and Philip Dybvig) ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டன.

இவர்களின் ஆராய்ச்சிகள் தற்போதைய நவீன வங்கி கட்டமைப்பில் ஒரு குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளிக்கின்றன. வங்கிகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பது தொடர்பான இவர்களின் ஆராய்ச்சிக்கு இந்தப் பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

இவர்களின் ஆராய்ச்சி நவீன வங்கிகள், பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ளுதல் தொடர்பானது. 1980 களின் முற்பகுதியில் பென் பெர்னான்க், டக்ளஸ் டயமண்ட் மற்றும் பிலிப் டைப்விக் ஆகியோரால் இந்த ஆராய்ச்சியின் அடித்தளம் அமைக்கப்பட்டது.

இந்நிலையில், 2020இல் தொற்றுநோய் தாக்கியபோது, உலகளாவிய நிதி நெருக்கடியைத் தவிர்க்க குறிப்பிடத்தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இந்த பிந்தைய நெருக்கடிகள் சமூகத்திற்கு பேரழிவு தரும் விளைவுகளுடன் புதிய மந்தநிலைகளாக உருவாகாமல் இருப்பதை உறுதி செய்ததில் இவர்களின் நுண்ணறிவு முக்கிய பங்கு வகிக்கிறது.

பென் பெர்னான்க் அளித்த செய்திக் குறிப்பில், “இங்கே ஒரு முரண்பாடு உள்ளது. எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டால், சேமிப்பாளர்கள் தங்கள் பணத்தை உடனடியாக அணுக விரும்புகிறார்கள்.

இது ஓர் அடிப்படை சிக்கலை முன்வைக்கிறது. இது வங்கிகளையும் பணத்தையும் நிலையற்றதாக ஆக்குகிறது மற்றும் சில நேரங்களில் அதிர்ச்சிக்கு ஆளாகிறது. எடுத்துக்காட்டாக, இந்த ஆண்டின் தொடக்கத்தில் சீனாவில் உள்ள ஒரு சில கிராமப்புற வங்கிகளில் இருந்து மக்கள் தங்கள் பணத்தை எடுக்க முடியாமல் போனது. அப்போது, வங்கி ஸ்தம்பித்தது. இது வங்கியின் சரிவுக்கு வழிவகுக்கும்” எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மேலும், 1930களின் உலகளாவிய மந்தநிலையில், நவீன வரலாற்றில் மிக மோசமான பொருளாதார நெருக்கடியில், தோல்வியடைந்த வங்கிகள் எவ்வாறு தீர்க்கமான பங்கைக் கொண்டிருந்தன என்பதை பெர்னான்க் நிரூபித்தார்.

இதில் சுவாரஸ்யம் என்னவெனில், பெர்னான்க், 2008களில் வங்கிகளில் நெருக்கடிகள் அதிகரித்தபோது அமெரிக்க மத்திய வங்கியான பெடரல் ரிசர்வ் தலைவராக இருந்தார்,

டயமண்ட் மற்றும் பிலிப் இருவரும் இணைந்து வங்கிகள் ஏன் வெளியேறுகின்றன? வரவிருக்கும் சரிவு பற்றிய வதந்திகளின் பாதிப்பு, இந்தப் பாதிப்பை சமூகம் எப்படி குறைக்க முடியும் என்பது பற்றி ஆராய்ச்சிகள் மேற்கொண்டனர். இவர்களின் ஆராய்ச்சிகள் நவீன வங்கி ஒழுங்குமுறையின் அடித்தளத்தை உருவாக்கியுள்ளன.

இந்த மாதிரியானது, வங்கியின் மைய வழிமுறைகளையும், அதன் பலவீனங்களையும் படம் பிடிக்கிறது. இது குடும்பங்கள் தங்கள் வருமானத்தில் சிலவற்றைச் சேமிப்பதை அடிப்படையாகக் கொண்டது.

அத்துடன் அவர்கள் விரும்பும்போது தங்கள் பணத்தை எடுக்க முடியும். இது ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரே நேரத்தில் நடக்காது. நிதி தேவைப்படும் திட்டங்களில் பணத்தை முதலீடு செய்ய அனுமதிக்கிறது. எனவே, வங்கிகள் பணப்புழக்கத்தை எளிதாக்க உதவும் இயற்கையான இடைத்தரகர்களாக வெளிப்படுகின்றன என்று அவர்கள் வாதிடுகின்றனர்.

ஆனால், வரலாற்றில் குறிப்பாக அமெரிக்காவில் மிகப்பெரிய அளவில் நிதி நெருக்கடிகள் காணப்பட்ட நிலையில், வங்கிகள் தாங்கள் கொடுக்கும் கடன்களை மதிப்பீடு செய்வதில் எப்படி கவனமாக இருக்க வேண்டும் அல்லது நெருக்கடியில் இருக்கும் வங்கிகளுக்கு பிணை எடுப்பது எப்படி இருக்கும் என்பது பற்றி அடிக்கடி விவாதிக்கப்படுகிறது.

மேலும், நிதிச் சந்தைகள் அவற்றின் செயல்பாட்டை நிறைவேற்ற எப்படி ஒழுங்குபடுத்தப்பட வேண்டும் – தொடர்ச்சியான நெருக்கடிகளை ஏற்படுத்தாமல் உற்பத்தி முதலீடுகளுக்கு சேமிப்பை மாற்றுவது – என்பது ஆராய்ச்சியாளர்கள் மற்றும் அரசியல்வாதிகள் மத்தியில் எழுப்பப்படும் தொடர் கேள்வியாகும்.

அந்த வகையில், நிதி சமூகத்திற்கு கடுமையான விளைவுகளுடன் நீண்ட கால மந்தநிலைகளாக வளரும் நிதி நெருக்கடிகளின் அபாயத்தைக் குறைப்பது அனைவருக்கும் மிகப்பெரிய நன்மையாகும்.

இலங்கை போன்ற பொருளாதார நெருக்கடியில் சிக்குண்ட நாடுகள், பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு பெற்றோர் முன்வைத்த நிதி நெருக்கடி தணிவு மூலோபாயங்களை ஆராய்தல் நல்லது. அவற்றை கவனத்திலெடுத்து திட்டங்களை வகுப்பது நல்லது என்பதை குறிப்பிட விரும்புகிறோம்.

## இன்றைய நாளில்...

- ★ 1903 – யாழ்ப்பாணத்தின் ஜவ்னா என்ற பயணிகள் கப்பல் நெடுந்தீவுக்குப் பயணம் மேற்கொண்டது.
- ★ 1948 – இலங்கையின் முதலாவது நாடாளுமன்றம் கூடியது.
- ★ 1956 – இந்திய தலித் தலைவர் அம்பேத்கர் தனது 385,000 ஆதரவாளர்களுடன் பௌத்த சமயத்துக்கு மாறினார்.
- ★ 1964 – மார்ட்டின் லூதர் கிங் அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றார்.
- ★ 1968 – விண்ணிலிருந்து முதலாவது நேரடி தொலைக்காட்சி அஞ்சல்: அப்போலோ 7 விண்கலத்திலிருந்து விண்வெளி வீரர்கள் புவியைச் சுற்றுவது ஒளிபரப்பப்பட்டது.
- ★ 1991 – பர்மாவின் எதிர்க்கட்சித் தலைவர் ஆங் சான் சூகி அமைதிக்கான நோபல் பரிசு பெற்றார்.
- ★ 1994 – பலஸ்தீனத் தலைவர் யாசிர் அரபாத், இஸ்ரேல் பிரதமர் இட்சாக் ரபீன், வெளியுறவுத்துறை அமைச்சர் சிமோன் பெரெஸ் ஆகியோருக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

# வாசிப்போம்.. வாசிப்பை நேசிப்போம்!

**2022 ஒக்டோபர் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது**

வாசிப்பு என்பது தனி மனித ஆளுமையின் அஸ்திவாரங்களின் ஒன்று. வாசிப்பை நேசிக்காத மனிதன் இவ்வுலக வாழ்க்கையின் முழுமையினையும், வாழ்வியலின் யதார்த்தத்தினையும் புரிந்து சக்தி மிக்க ஆளுமையாகத் திகழ முடியாது.

வாசிப்பு ஒரு மனிதனை முழுமையடையச் செய்யும். வாசிப்பு அவனை வாழவைக்கும். வாசிப்பு மனிதனுக்கு புத்துணர்ச்சி அளிக்கும்.

வாசிப்பினை மூலதனமாக்கிவர்களே இவ்வுலகில் ஆற்றல்மிக்கவர்களாகவும் ஆட்சியாளர்களாகவும் சாதனை படைத்தவர்களாகவும் ஆளுமை மிக்கவர்களாகவும் வாழ்ந்திருக்கின்றார்கள் ஆதலால் வாசிப்போம். வாசிப்பை நேசிப்போம்.

இதனை மூலமந்திரமாகக் கொண்டே இலங்கை அரசு 2004 ஆம் ஆண்டு முதல் ஒக்டோபர் மாதத்தினை தேசிய வாசிப்பு மாதமாக பிரகடனப்படுத்தியுள்ளது. அந்த ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் தொடர்ச்சியாக ஒக்டோபர் மாதம் வாசிப்பு மாதமாக நூலகங்கள் தோறும் பெரு விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இதன் ஊடாக பொதுமக்களையும் மாணவ மாணவிகளையும் வாசிப்பின் பால் ஈர்ப்பை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் இலங்கை அரசு நூலக ஆவணங்கள் சபையின் ஊடாக வருடத்துக்கு ஒரு தொனிப்பொருளை மையமாக வைத்து வாசிப்பை ஊக்கப்படுத்துவதற்காக பல்வகை நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்குபடுத்துவதற்கு சுற்று நிருபங்களை வெளியிடுவதுவதுடன், இதற்காக ஆரம்பிக்கப்பட்ட வேலைகளுக்காக கல்வி அமைச்சு, உள்ளூராட்சி அமைச்சு மற்றும் உள்ளூராட்சி திணைக்களங்கள் ஊடாக நிதி ஒதுக்கீடுகளையும் செய்து ஊக்கப்படுத்தி வருகின்றது.

‘அறிவார்ந்த சமுகத்திற்கான வாசிப்பு’ என்பதே 2022ஆம் ஆண்டின் ஒக்டோபர் வாசிப்பு மாதத்தின் பிரதான கருப்பொருளும், இலக்குமாகும். இது நமது அரசின் மிக உன்னதமான வேலைத் திட்டமாகும். இதற்கமைவாக இவ்வருடம் கீழ்வரும் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு சுற்று நிருபத்தின் வாயிலாக அறிவிக்கப்பட்டுள்ளது. அவையாவன:-

★ அனைவருக்கும் வாழ்நாள் முழுவதும் கற்றலுக்கான அணுகலை வழங்குவது தொடர்பில் இலக்கை அடைய சமூக எழுத்தறிவு மேம்பாட்டுத் திட்டங்களை நடத்துதல்.

★ ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான அபிவிருத்தித் திட்டத்தின் ஐந்தாவது நோக்கத்தின் படி “பாலின சமத்துவத்தை அடைதல் மற்றும் அனைத்து பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு அதிகாரமளித்தல்” என்ற இலக்கை அடைய வாசிப்பு ஊக்குவிப்பு திட்டங்களை ஏற்பாடு செய்தல்.

★ ஆராய்ச்சியாளர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் தகவலை தேடும் பிரதேச பொதுமக்களின் தேவைகளுக்காக தகவலை அணுகுவதற்கு தேவையான வசதிகள் மற்றும் உதவிகளை வழங்குதல்.

★ நூலக சமூகத்தின் முறைசார்ந்த மற்றும் முறைசாரா கல்வி நடவடிக்கைகளுக்காக பொருத்தமான திட்டங்களை செயற்படுத்தல்.

★ இப்பிரதேசத்தில் உள்ள பாடசாலை மாணவர்கள் மற்றும் உயர் கல்வி தேவையுள்ள அங்கத்தவர்களின் தகவல் தேவைகளை அடையாளம் காண நடவடிக்கை எடுத்தல்.

★ உள்ளூராட்சிப் பகுதியில் உள்ள ஒவ்வொரு வீடும் ஒரு நூலகம் என்ற கருத்தை மையமாக கொண்டு வீட்டு நூலகங்களை தொடங்குவதற்கான திட்டங்களைச் செயற்படுத்தல்.

★ வீட்டு நுகர்விற்கு பொருத்தமான பயிர்கள் மற்றும் தாவரங்கள் பற்றி விழிப்புணர்வூட்டுவதுடன், அப்பயிர்களை வளர்ப்பதற்கு தேவையான தகவல்களை வழங்குதல்.

★ வாசகர் சமூகத்தில் உள்ள ஒவ்வொரு வாசகரின் வீட்டிலும் வீட்டுத் தோட்டங்களை செய்வதற்கு ஊக்குவித்தல்.

★ பயிர்களின் விற்பனை பரிமாற்றம் தொடர்பான சந்தைப்படுத்தல் வசதிகளுக்கு நூலக வளாகத்தை வழங்குதல்.

★ இணையம் மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் நூலக சேகரிப்புகள் பற்றிய தகவல்களை விளம்பரப்படுத்தல்.

★ உள்ளூர் கைத்தொழில்கள் தொடர்பான பல்வேறுபட்ட சுயதொழில்கள் பற்றிய அறிவைப் பெறுவதற்கு வழிகாட்டுதல்.

★ ‘பசுமை நூலகம்’ என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு சுற்றுச் சூழலை பாதுகாத்தல் தொடர்பாக நூலகம் சார்பில் செய்யக்கூடிய செயற்பாடுகளை செய்தல்.

★ பிளாஸ்டிக் மீள்சுழற்சிக்கான சேகரிப்பு மையமாக நூலகம் செயற்படுதல் அல்லது அதனுடன் தொடர்புடைய உள்ளூராட்சி நிறுவனத்தை வழிநடத்தல்.

★ உள்ளூர் வாசகர்களின் படைப்பாற்றலை வெளிப்படுத்தும் வடிவமைப்புகளைக் கொண்ட இதழ்கள் மற்றும் சுவரொட்டிகளை வெளியிடுதல்.

★ தொனிப்பொருளுடன் தொடர்பான பல்வேறுபட்ட போட்டிகளை நடத்துதல் (கட்டுரைப் போட்டி, சித்திரப்போட்டி)

★ தொனிப்பொருளுடன் தொடர்பான போஸ்டர்களை வடிவமைத்தல்.

★ புதிய அங்கத்தவர்களை சேர்த்தல் மற்றும் இலவச அங்கத்துவத்தை வழங்குதல்.

★ நூலகம் பற்றிய விளம்பரப் பிரசாரங்களை நடத்துதல்.

★ தொடர்புடைய பிரதேசத்தில் சிறந்த வாசகரைத் தேர்ந்தெடுத்தல்.

★ நடமாடும் நூலக சேவைகளை நடத்துதல்.

★ சிறுவர்களின் வாசிப்புப் பழக்கத்தை அதிகரிக்க கதை கூறும் நேரம், சிறுவர் படங்கள், சிறுவர் நாடகங்கள் போன்ற பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளைச் செயற்படுத்தல்.

★ சிறுவர்களின் வாசிப்பு பழக்கத்தை மேம்படுத்துவது தொடர்பில் பிற ஆக்கபூர்வமான நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்.

★ வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க ஏனைய நூலகங்களுடன் இணைந்து கூட்டுறவுத்திட்டங்களை ஏற்பாடு செய்தல்.

★ நூலக முகநூல் பக்கத்துடன் இதுவரை இணையாத வாசகர்களை அடையாளம் கண்டு அவர்களை முகநூல் பக்கத்துடன் இணைத்துக் கொள்வதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதுடன், முகநூலில் வாசிப்பு தொடர்பான மேற்கோள் உரைகள் மற்றும் கருத்துகளை பரிமாறிக்கொள்ளல்.

★ அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் மூலம் நூலகத்தால் செயல்படுத்தப்படும் பல்வேறுபட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பான தகவல்களை வெளியிடுதல்.

★ உள்ளூரில் புதிய கண்டுபிடிப்புகள், புதிய கருத்துகள் மற்றும் யோசனைகளைக் கொண்டு வரும் சிறுவர்கள் மற்றும் பொதுமக்களை மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

இவ்வாறான திட்டங்களை செயற்படுத்தும்போது ஏற்படுகின்ற அறிவியல் மாற்றங்களின் தாக்கம், வாசிப்பின் மீதான ஆர்வத்தினை ஏற்படுத்தும் என எதிர்பார்கப்படுகின்றது.

சர்வதேச ஆய்வுகளின்படி 19 வயதுக்குட்பட்ட அனைவரும் சிறுவர்களே. அவர்கள் அனைவரும் பாடசாலை செல்லும் மாணவர்கள். இவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கம் மிகவும் அருகிவருகின்றமை கவலைக்கிடமாகவுள்ளது.

இவர்கள் வாசிப்பின் பெறுமதியினையும், அதன் அவசியத்தினையும் புரியாதவர்களாக பாடசாலை பாட விதானங்களை மட்டும் படித்து பரீட்சைக்கு தோற்றுபவர்களாகவும் அதில் சித்தியடைந்து பட்டங்களை பெற்று தொழில் பெறுகின்ற குறுகிய நோக்கத்துடனேயே அவர்களது வாழ்வு முடக்கப்படுகின்றது.

பெற்றோர்களும் ஆசிரியர்களும் கூட அதனை இலக்காகக் கொண்டே மாணவர்களை வழி நடத்திக் கொண்டிருக்கின்றனர். பாடசாலை கற்றலுக்கு மேலாக தனியார் வகுப்புகள் தொலைக்காட்சி, ஸ்மார்ட்போன் என ஒரு குறுகிய வட்டத்துக்குள்ளேயே அவர்களின் அறிவுத்தேடல் மழுங்கடிக்கப்படுகின்றது.

இந்த நவீன உலகின் சவால்களை முறியடித்து வெற்றி இலக்கு நோக்கி பயணிப்பதற்கும், தனிமனித ஆளுமை மிக்கவராகவும் சமூக அங்கீகாரமுடையவராகவும், பொது அறிவு மிக்கவராகவும், தனித்துவமுடையவராகவும், சக்தி மிக்கவராகவும் நீங்கள் ஆகவேண்டுமாயின் நீங்கள் சிறந்த வாசிப்பு பழக்கத்தை உடையவராக மாறுங்கள்.

ஒரு தனி மனிதனுக்கு சமூகத்தில் அங்கீகாரம் கிடைக்க வேண்டுமானால் அவன் தனித்துவமான சிறந்த பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும். அப்படியான சிறந்த பண்புகள் மேலோங்க வேண்டுமாயின் நூல்களை நேசிப்பவராகவும் அவைகளை இரசித்து வாசிப்பவராகவும் இருக்க வேண்டும்.

பல நூல்களை வாசிக்கின்றவர் பல பெறுமானங்களை பெறுகின்றார். அவர் பெறுகின்ற அந்த பல பெறுமானங்கள்தான் அவரை தனித்துவமானவராக மேலோங்கச் செய்கின்றன. அதன்மூலம் அவர் அச்சமூகத்தின் தனிமனித அங்கீகாரத்தை பெறுகின்றார்.

வாசிப்பு என்பது ஓர் அற்புதமான பழக்கம். இதன் மூலம் கிடைக்கும் அறிவும் அதனால் பெருகும் ஆற்றலும் நம்மை பண்படுத்தி, நம்மை பட்டை தீட்டி வைரமாக்கும் என்பதில் ஐயமில்லை.

இதனை நம்மில் பெருந்தொகையானவர்கள் அறியாமல் ஓய்வு காலத்தை வீணடித்து விடுவது ஆழ்ந்த கவலைக்குரிய விடயமாகும். தேநீர் கோப்பையோடு முற்றத்தில் இருந்துகொண்டு பத்திரிகைகள், சஞ்சிகைகள், நூல்கள் என்பவற்றையும் வாசிப்பதும் அதிலுள்ள சுவாரஸ்யங்களை நம் பக்கத்தில் இருப்பவர்களுடன் சொல்லி மகிழ்வதும் நம் மத்தியில் அருகிப் போய்விட்டது.

இந்தத் துர்ப்பாக்கியநிலை மாற்றப்பட்டு எதிர்காலத்தில் சிறியவர்களுடன் சேர்ந்து பெரியவர்களும் வாசிப்பாளர்களாக மாற வேண்டும். அப்போதுதான் நமது பிள்ளைகளான இளையவர்களும் வாசிப்பாளர்களாக மாறுவார்கள்.


இவ்வாறு நல்ல புத்தகங்களை நீங்கள் வாசிக்க வாசிக்க உங்களின் அறிவு பல விடயங்களை இரசித்து அதன் மூலம் வாழ்வில் நல்ல கோட்பாடுகளை உருவாக்க முடியும். அதனூடாக ஒரு சிறந்த வாழ்க்கையினை உருவாக்கி கொள்வதுடன், நமது பிள்ளைகளையும் நமது சமூகத்தினையும் நன்கு சீரமைக்க முடியும்.

பொதுஅறிவு, இரசிப்புத்திறன், ஞாபக சக்தி, பிழையில்லாத எழுத்து, நேர்த்தியான வசனநடை, சிறந்த பேச்சு என்பவற்றை கட்டமைக்க வாசிப்பு இன்றியமையாததாகும். பரீட்சைகளை வெற்றிகரமாக எதிர்கொள்ள, பல்கலைக்கழகம் செல்ல, பட்டம் பெற, பதவிகள் பெற எவ்வகையான தலைப்பிலும் உரையாற்ற வாசிப்பே அடிப்படையாகும்.

இது மட்டுமன்றி ஏனையவர்களிலிருந்து நீங்கள் வேறுபட்ட திறனாளியாகவும், தொழில் நிலையத்தில் ஆற்றல் மிக்கவராகவும், வினைத்திறன் மிக்கவராகவும், நீங்கள் அடையாளப்படுத்தப் படுவீர்கள். மேலும், நம்மை சில நேரங்களில் கவ்விக்கொள்ளும் விரக்தி, கோபம், இயலாமை, அசௌகரியங்கள், இன்னல்கள், துன்பங்கள் என்பவற்றிலிருந்து மீண்டு வருவதற்கும், புத்துணர்ச்சி பெறுவதற்கும் வாசிப்பு இன்றியமையாத துணையாகும்.

அது சகல விடயங்களுக்கும் நமது உற்ற நண்பனாக, வழிகாட்டியாக நம்மை புடம் போட்டுக் கொண்டிருக்கும்.

நாளுக்கு நாள் மாறி வரும் நவீன உலகின் சவால்களை எதிர்கொண்டு ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக தகவல்களையும், அறிவையும் அறிந்து கொண்டு, அவற்றை மூலதனமாக்கி நாளைய உலகை வெற்றிவாகை சூட வாசிப்பு அத்தியாவசியமானதாகும். ஆதலால் கண்டதையும் கற்று பண்டிதன் ஆவதற்கு வாசிப்போம்! வாசிப்பை நேசிப்போம்!



அப்துல் ஜப்பார் சமீம் ஜே.பி.
பிரதம வருமான பரிசோதகர்
மாநகர சபை – கல்முனை



ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## 13.10.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 112 623 | 123 4228 |
| கனேடியன் டொலர் | 147 2736 | 16 1 53 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 38,0611 | 41 10 0 |
| யூரோ | 235 4 14 | 250 2571 |
| ஜப்பான் யென் | 1 3205 | 1 4240 |
| சிங்கப்பூர் டொலர் | 138 045 | 148 5 86 |
| ஸ்ரேலிங் பவுன் | 285 53 5 | 301 2165 |
| சுவிஸ் பிரான்ங் | 245 87 2 | 263 1547 |
| ஐ.அ.டொலர் | 248 5876 | 26 3150 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 850 5318 |
| குவைட் | குவைட் தினார் | 0,057 8372 |
| ஓமான் | ஓமான் றியால் | 831 45 6 |
| கட்டார் | கட்டார் றியால் | 88,5388 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 4562 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 6883 |

# குருந்தூர்மலை விவகாரத்தில் நீதிமன்றக் கட்டளை மீறப்பட்டுள்ளதா?

## வழக்கு விசாரணை 27ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

(முல்லைத்தீவு நிருபர்)

குருந்தூர்மலை தொடர்பாக இலக்கம் AR/673/18 இல் தொடரப்பட்டுள்ள வழக்கில், 2022ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12ஆம் திகதிக்கு முன்னிருந்த நிலையை பேணுமாறும், அதற்குமேல் கட்டுமானப் பணிகள் எதனையும் மேற்கொள்ளக்கூடாதெனவும் முல்லைத்தீவு நீதிமன்றம் கடந்த ஜூன் மாதம் 19ஆம் திகதி கட்டளை பிறப்பித்திருந்தது.

இந்நிலையில், குருந்தூர்மலை விவகாரம் தொடர்பில் கடந்த செப்டெம்பர் மாதம் 22ஆம் திகதியன்று முல்லைத்தீவு நீதிமன்றில் விசாரணைகள் இடம்பெற்றபோது, நீதிமன்றால் வழங்கப்பட்ட கட்டளையானது மீறப்பட்டதாகவும் அவ்வாறு மீறப்பட்டதாலேயே கடந்த செப்டெம்பர் மாதம் 21ஆம் திகதியன்று தமிழ்மக்கள் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டதாகவும் குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயம் சார்பான சட்டத்தரணிகள் புகைப்பட ஆதாரங்களையும் நீதிமன்றில் சமர்ப்பித்தனர்.

அதனடிப்படையில் அவ்வாறு நீதிமன்றால் வழங்கப்பட்ட கட்டளைகள் மீறப்பட்டதா என்பது





தொடர்பில் பொலிஸார் மற்றும் தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் ஆகியோர் நேற்று நீதிமன்றில் தோன்றி விளக்கமளிக்கவேண்டுமென முல்லைத்தீவு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

அந்தவகையில் நீதிமன்றின் உத்தரவை ஏற்று நேற்று தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் அனுர மானதுங்க நீதிமன்றில் முன்னிலையானதுடன், தொல்லியல் திணைக்களம் சார்பில் சட்டமா அதிபர் திணைக்களப் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் உள்ளிட்ட சட்டத்தரணிகளும் முன்னிலையாகியிருந்தனர்.

அத்தோடு பொலிஸார் மற்றும் குருந்தூர் மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயம் சார்பான சட்டத்தரணிகளும் மன்றில் முன்னிலையாகியிருந்தனர். இந்நிலையில், குறித்த வழக்கு விசாரணைகள் நீதிபதி ரி.சரவணராஜா முன்னிலையில் இடம்பெற்றதுடன், இரு தரப்பினரும் தமது சமர்ப்பணங்களை முன்வைத்தனர்.

அந்தவகையில் இருதரப்பு சமர்ப்பணங்களையும் நன்கு செவிமடுத்த நீதவான், இதுதொடர்பில் கட்டளையொன்றினை வழங்குவதற்காக எதிர்வரும் 27ஆம் திகதிக்கு குறித்த வழக்கினைத் திகதியிட்டுள்ளார்.

மேலும் குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயம் சார்பாக முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரனும் நீதிமன்றிற்கு வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




பேருவளை, மருதானை அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஅத் ஏற்பாட்டிலான மீலாதுன் நபி ஊர்வலம் சிறப்பாக இடம்பெற்றது.மருதானை மஸ்ஜிதுல் அப்ரார் பள்ளிவாசல் வளாகத்திலிருந்து ஸலவாத்துடன் ஆரம்பமான ஊர்வலத்தில் சிறுவர்கள், இளைஞர்கள், உலமாக்கள், பிரதேசவாசிகள் பங்குபற்றினர்.
(படங்கள் - பீ.எம்.முக்தார்)

# பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நிலைமையை மேம்படுத்த பின்லாந்து தொடர்ந்தும் அழுத்தங்களைக் கொடுக்கும்

## அந்நாட்டு அதிகாரிகளுடனான சந்திப்பின்போது கஜேந்திரன் எம்.பி. நம்பிக்கை



இலங்கையில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நிலையை மேம்படுத்த பின்லாந்து தொடந்தும் அழுத்தங்களை வழங்குமென தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரும், கட்சியின் செயலாளருமான செ.கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச இராஜதந்திர கவுன்சில் ஏற்பாட்டில் பினலாந்துக்கு விஜயம் செய்துள்ள அவர் நேற்று முன்தினம் (12) பின்லாந்தின் வெளியுறவுத்துறை அமைச்சர் பெக்கா காவிஸ்தோ உட்பட அரசின் முக்கிய பிரமுகர்களையும், வெளிநாட்டமைச்சின் கொள்கை வகுப்புப் பிரிவு அதிகாரிகளையும், ஆசிய அமெரிக்கப் பிரதிநிதிகளையும், நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

தமிழர் தாயகத்தில் எமது மக்கள் எதிர்கொண்டுள்ள இன்னல்களையும், ஸ்ரீ லங்கா அரசின் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு சார்ந்தும் தெளிவாக அவர்களுக்கு தெரியப்படுத்தியிருந்தேன். தாயகத்தில் தமிழ் மக்கள் சந்தித்துள்ள துன்பங்கள் பின்லாந்து அரசின் கவனத்தை ஈர்த்துள்ளது. தொடர்ந்தும் பாதிக்கப்பட்ட மக்களின் நிலையை மேம்படுத்த பின்லாந்து, ஜெனிவா மனிதவுரிமைப் பேரவையில் தனது தெளிவான அழுத்தங்களைக் கொடுக்கும் என அவர்கள் எமக்கு இதன்போது தெரிவித்திருந்தனர்.

அத்துடன், மனிதவுரிமை மேம்பாட்டு விடயங்கள் சார்ந்து பணியாற்றும் முக்கியமான அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளேன். அவர்களும் தொடர்ந்தும் தமிழ் மக்களுக்கு எதிரான கட்டமைக்கப்பட்ட இனவழிப்புக்கு நீதி கோரி சந்திப்புகளை செய்து வருகிறார்கள். குறித்த சந்திப்புக்களின் சர்வதேச இராஜதந்திர கவுன்சிலின் பின்லாந்து பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ். மாநகருக்குட்பட்ட பிரதேசங்களில் சுகாதார சீர்கேடுகள் தொடர்பான கண்காணிப்புகள் தீவிரம்

## தவறிழைப்பவர்களுக்கு தண்டப்பணம் அறவிடப்படுமென அறிவிப்பு




யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் பொது இடங்களில் குப்பை கொட்டுதல், வெற்றிலை துப்புதல போன்று சுற்றுச்சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் செயற்பாடுகளுக்கு தண்டப்பணம் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், இனிவரும் காலங்களில் இதுதொடர்பில் தீவிரமாக கண்காணிக்கப்படும் - என்று யாழ். மாநகர சபை உறுப்பினரும், சுகாதார குழுத் தலைவருமான வ.பார்த்தீபன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தவறிழைப்பவர்களுக்கு உடனடியாகவே தண்டப்பணம் அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மாநகரத்தை தூய்மையாகப் பேணும் முகமாக மாநகர சபையினால் கழிவகற்றும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கழிவுகளை உரிய முறையில் அகற்றும் செயற்பாடுகள் நடைமுறைப் படுத்தப்பட்டாலும், பலரும் கழிவுகளை உரிய இடங்களில் அப்புறப் படுத்தாமல் வீதிகள், பொது இடங்களில் வீசிவிட்டுச் செல்கின்றனர். அதனால் சுகாதார சீர்கேடுகள் இடம்பெறுகின்றன.

வீடு வீடாக தூய்மை பணியாளர்கள் வரும்போது, குடியிருப்பாளர் குப்பைகளை தரம் பிரித்து அவர்களிடம் கையளிக்க வேண்டும். அவ்வாறு அவர்கள் வரவில்லையெனில் மாநகர சபைக்கோ அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கோ முறையிடலாம். அதனை விடுத்து வீதிகளில் கழிவுகளை வீசிச் செல்வதனால் சூழலுக்கு பாதிப்பு ஏற்படுகின்றது.

கடந்த காலங்களில் இருந்த தண்டப்பணத்தினை தற்போது சபையின் அனுமதியுடன் திருத்தியமைத்துள்ளோம். பொது இடங்களில் குப்பை கொட்டுதலுக்கு 5 ஆயிரம் ரூபாவும், பொது இடத்தில் வெற்றிலை துப்பினால் 2 ஆயிரம் ரூபாவும், பொது இடத்தில் மலசலம் கழித்தால் 5 ஆயிரம் ரூபாவும் தண்டப்பணம் அறவிடப்படும் - என்றார்.

# பயிர்ச்செய்கைக்குத் தேவையான உழவு இயந்திரம் குறைந்த கூலிக்கு

## பூநகரி பிரதேச சபை நடவடிக்கை

பொருளாதார நெருக்கடியால் பாதிப்படைந்துள்ள விவசாயிகளின் நன்மை கருதி பூநகரி பிரதேச சபை எடுத்துள்ள முன்மாதிரியான செயற்பாடு பலரதும் பாராட்டைப் பெற்றுள்ளது.

தற்போது பருவகால பயிர்ச்செய்கை மற்றும் மேட்டுநிலப் பயிர்ச்செய்கை என்பன ஆரம்பித்துள்ளன. இந்நிலையில், பயிர்ச்செய்கைக்குத் தேவையான நிலத்தினை உழுவதற்கு பூநகரி பிரதேச சபை தனது உழவு இயந்திரத்தை குறைந்த கூலியில் சேவைக்கு அமர்த்தியுள்ளது.

அதனடிப்படையில், ஓர் உழவுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 3,000 ரூபாவும், இரண்டு உழவுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 5,500 ரூபாயும் பூநகரி பிரதேச சபையால் அறவிடப்பட்டு விவசாயிகளுக்கான வயல் நிலங்கள் உழப்பட்டு வருகின்றன. இதனை அடிப்படையாகக்கொண்டு பூநகரியில் தனியாரும் 5,500 ரூபா முதல் 6,000 ரூபா வரையே மக்களிடம் உழவிற்கான கூலியாக அறவிட்டு வருகின்றனர்.

இதனை விவசாயிகள் பலரும் வரவேற்றுள்ளனர்.

ஆனால், வவுனியா போன்ற மாவட்டங்களில் ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாவரை உழவுக்கான கூலி அறவிடப்படுவதாக தெரிவித்த விவசாயிகள், வவுனியாவிலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள், கமநல அபிவிருத்தித் திணைக்களங்கள் என்பவற்றிடம் உழவு இயந்திரங்கள் இருந்தும் விவசாய மாவட்டமான வவுனியா விவசாயிகளின் நன்மை கருதி இவ்வாறான ஒரு செயற்பாட்டை முன்னெடுக்கவில்லை.

இதனால் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் தனியார், விவசாயிகளிடம் உழவுக்கான பணத்தை அறவிடுவதாகவும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

# வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கட்டுரை, பேச்சுப் போட்டிகளை நடத்த ஏற்பாடு

கம்பஹா மாவட்ட ஐக்கிய முஸ்லிம் சங்கம் இம் மாதம் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு களனி வலயத்தில் சில பாடசாலைகள் மற்றும் அஹதியா பாடசாலைகள் மத்தியில் கட்டுரைப் போட்டியும் பேச்சுப் போட்டியும் நடத்த திட்டமிட்டுள்ளது.

தெரிவுசெய்த சிங்களப் பாடசாலை மாணவர்களுக்கு இடையே பேச்சுப் போட்டியும் தமிழ் பாடசாலை மாணவர்களுக்கு மத்தியில் கட்டுரைப் போட்டியும் நடைபெறவுள்ளன.

இவ்விரு போட்டிகளிலும் முதல் மூன்று ஸ்தானங்களை பெறுவோருக்கு பரிசில்கள் வழங்குவதுடன், போட்டிகளில் கலந்துகொள்ளும் சகலருக்கும் நற்சான்றிதழ் வழங்கப்படும் என்று ஏற்பாட்டுக் குழுவினர் பத்திரிகைக்கு தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் 29ஆம் திகதி காலை வத்தளை ஹுனுபிட்டிய ஸாகிரா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் நடைபெறும் இவ்விழாவில் பல முக்கியஸ்தர்களும் கலைஞர்கள், இலக்கியவாதிக,ள் அறிவுஜீவிகள் பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

# வாக்குறுதிகளுக்கேற்ப ஆட்சியாளர்கள் செயற்படுவதில்லை!

## வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளைத் தேடும் குடும்பங்களின் சங்கத் தலைவி கவலை

(மன்னார் நகர் நிருபர்)

ஆட்சிக்கு வருகின்ற அனைத்து அரசாங்கமும் பாதிக்கப்பட்ட மக்களை காப்பாற்றுவதற்காகவும், நீதியை பெற்றுத் தருவதற்காகவும் செயற்படவில்லை. அவர்கள் தமது அரசையும், இராணுவத்தையும் பாதுகாப்பதற்காக பயங்கரவாதத்தை ஆதரித்து போர்க்குற்றத்தை மேற்கொண்டவர்களுக்கே பாதுகாப்பு வழங்கி வருவதாக மன்னார் மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளைத் தேடும் குடும்பங்களின் சங்கத் தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று (13)இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

காணாமலாக்கப்பட்ட எமது உறவுகளுக்கு 2 இலட்சம் ரூபா பணமும் மரணச் சான்றிதழும் வழங்கவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். ஏற்கனவே ஒரு இலட்சம் ரூபா வழங்கவுள்ளதாகவும் அதற்கு வட்டியுடன் சேர்த்து 2 இலட்சம் தருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் ஏற்பட்ட இனப்படுகொலைக்கு எமது பிள்ளைகள், உறவுகள் காணாமல்போனதற்கு காரணம் தற்போதைய ஜனாதிபதி.

ஆட்சிக்கு வருகின்ற எந்தவொரு அரசாங்கமும் பாதிக்கப்பட்ட மக்களை காப்பாற்றுவதற்காகவும்



நீதியை பெற்றுத்தருவதற்காகவும் அவர்கள் செயல்படவில்லை. அவர்கள் தமது அரசாங்கத்தையும், இராணுவத்தையும் பாதுகாப்பதற்காக பயங்கரவாதத்தை ஆதரித்து போர்க்குற்றத்தை மேற்கொண்டவர்களையே பாதுகாத்தார்கள்.

இந்த அரசாங்கமும் இதற்கே முயற்சித்து வருகின்றது. காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்காக அம்மாக்கள் வீதிகளில் நின்று போராடி வருகின்றனர். கையில் ஒப்படைக்கப்பட்டு, கண்முன்னே பிடித்துச் செல்லப்பட்ட நிலையில் காணாமலாக்கப்பட்ட எம் உறவுகளைத் தேடி நாங்கள் வீதியில் நின்று போராடி வருகிறோம். எமது போராட்டத்துக்கு சுமார் 2 ஆயிரம் நாட்களும் தாண்டியுள்ளன. எமக்கு நீதி வேண்டும். எமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது? என்றே நாங்கள் கேட்டுக்கொண்டே இருக்கிறோம். நாங்கள் அரசிடம் நிதி கேட்கவில்லை. இவர்கள் வழங்கவுள்ள 2 இலட்சத்தையும் நாங்கள் எதிர்பார்க்கவில்லை.

நாங்கள் தொலைத்தது ஆடு, மாடுகளை அல்ல. எமது பிள்ளைகளையே. நாங்கள் கையில் ஒப்படைத்த, வீடுகளில் வந்து பிடித்துச்சென்ற எமது பிள்ளைகளையே கேட்கிறோம். இறந்தவர்களை கேட்கவில்லை. இந்த சூழ்நிலையில் தற்போதைய ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமித்துள்ளார். குறித்த ஆணைக்குழு வடக்கு, கிழக்கில் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளிடம் விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளது.

இனியும் அவர்கள் என்ன விசாரணைகளை மேற்கொள்ளப்போகிறார்கள்? அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்ட, இராணுவத்தினரால் பிடித்துச் செல்லப்பட்ட எமது உறவுகளை ஒப்படைக்கும்படியே நாங்கள் கோருகிறோம்.

எமது பிள்ளைகள் எங்கே? என்ன நடந்தது என்றே கேட்கின்றோம். எங்களையும் ஏமாற்றி உலக நாடுகளையும் ஏமாற்றி ஜெனீவா கூட்டத்தொடர் இடம்பெறுகின்றபோது ஒவ்வொரு வருடமும் புதிது புதிதாக விடயங்களை சமர்ப்பிக்கின்றனர்.

எமது பிள்ளைகளை கொலை செய்துவிட்டு 2 இலட்சம் ரூபாபணத்தையும் மரணச் சான்றிதழையும் வழங்க இந்த அரசு எத்தனிக்கிறது. நீங்கள் எங்களுக்கு 2 இலட்சம் ரூபா தர வேண்டாம்.

நாங்கள் உங்களுக்கு 4 இலட்சம் தருகிறோம். எங்களது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்று கூறுங்கள் - என்றார்.

திகதி 12.10.2022 புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4906
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 9,285,250.00
ஆங்கில எழுத்து Y வெற்றி இலக்கங்கள் 8 9 0 8 7 1
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 25,588,978.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3148
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,615,420.00
ஆங்கில எழுத்து D வெற்றி இலக்கங்கள் 05 36 39 49
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 81,811,027.60

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1361
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,875,500.00
வெற்றி இலக்கினம் கடகம் வெற்றி இலக்கங்கள் 8 4 5 2 4 6
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,277,831.20

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 936
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,448,080.00
வெற்றி இலக்கினம் U வெற்றி இலக்கங்கள் 50 57 63 67
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 129,647,268.00

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் : 215
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 7,534,740.00
இலக்கினம் சிம்மம் வெற்றி இலக்கங்கள் 19 37 43 55
விசேட இலக்கினம் சிம்மம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,600,599.80

கோடி 27 + Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1254
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,464,300.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 275,631,834.00
P 13 23 55 58 68
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# பனை அபிவிருத்திச் சபையின் தலைமை அலுவலகக் கட்டடம் திறந்துவைப்பு







(யாழ். நிருபர்)

பனை அபிவிருத்திச் சபையின் தலைமை அலுவலகக் கட்டடம் நேற்று (13) கைதடியில் திறந்துவைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் கைதடியிலுள்ள பனை ஆராய்ச்சி நிலையத்திற்கு அருகில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத் தொகுதி நேற்றுக் காலை 9 மணியளவில் அமைச்சர்களால் திறந்துவைக்கப்பட்டது.

திறப்பு விழாவில் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரண, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் லொகான் ரத்வத்த, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் செயலாளர் ஜனக தர்மகீர்த்தி, பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் கிரிசாந்த பத்திராஜா, யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் க.மகேசன் உள்ளிட்ட அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

குறித்த கட்டடத் தொகுதியின் நிர்மாணப் பணிகள் முழுமையாக பூர்த்தியடையாத நிலையில் கீழ்த்தளம் மாத்திரம் திறந்துவைக்கப்பட்டது.

## ஓமந்தையில் மின்னல் தாக்கி 11 மாடுகள் பலி!



(வவுனியா நிருபர்)

வவுனியா, ஓமந்தைப் பகுதியில் மின்னல் தாக்கத்தின் காரணமாக 11 மாடுகள் பலியாகியுள் ளன. நேற்று முன்தினம் (12) மாலை இடம் பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, ஓமந்தை, அரச முறிப்புப் பகுதியில் மாலை நேரம் மாடுகள் மேய்ச்சலில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது மழை பெய்துள்ளது.

இதன்போது, மாடுகள் மேய்ச்சலில் ஈடுபட்ட பகுதியிலுள்ள மரத்தின் மீது இடி மின்னல் தாக்கம் ஏற்பட்டு மாடுகளை தாக்கியமையால் 11 மாடுகள் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளன.

இதேவேளை, வவுனியாவில் கடந்த சில நாட்களாக மழை பெய்துவரும் நிலையில் கடந்த 7ஆம் திகதி இடி, மின்னல் தாக்கத்தினால் மாமடு பகுதியில் குடும்பப் பெண் ஒருவர் மரணமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வினாடி வினாப் போட்டியில் கலந்துகொண்ட மாணவர்களுக்கு பரிசளிப்பும் மரக்கன்று வழங்கலும்







(யாழ். நிருபர்)

ஈர நிலங்களின் முக்கியத்துவத்தை மாணவர்கள் அறிந்துகொள்ளும் முகமாக எதிர்காலத்தை நோக்கிய சுற்றுச் சூழல் கழகமும், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி சுற்றாடல் கழகமும் இணைந்து நடத்திய வினாடி வினா பரீட்சையில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. அதேவேளை, குறித்த போட்டியில் கலந்துகொண்ட அனைவருக்கும் பயன் தரும் மா மரக் கன்றுகளும் வழங்கப்பட்டன.

பாடசாலை அதிபர் தி.வரதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருத்தினராக வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் விவசாய பிரதி கல்விப் பணிப்பாளர் திருமதி வேழினி பாலேந்திராவும், சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் வலயக்கல்வி அலுவலக ஆசிரிய ஆலோசகர் ப.அருந்தவம் மற்றும் எதிர்காலத்தை நோக்கிய சுற்றுச்சூழல் கழக செயலாளர் ம.சசிகரன் ஆகியோரும் கலந்துகொண்டு மாணவர்களுக்கு பரிசில்களையும், சான்றிதழ்களையும், மாங்கன்று களையும் வழங்கினர்.

## வவுனியாவில் முச்சக்கரவண்டியைத் திருடிய குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைது

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் முச்சக்கரவண்டி ஒன்றினை திருடிய குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய நபர் நேற்று முன்தினம் (12) நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, புதிய பஸ் நிலையம் முன்பாக வாடகை ஓட்டத்திற்காக தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டிருந்த முச்சக்கரவண்டி ஒன்றினை கடந்த செவ்வாய்க்கிழமை (11) ஒருவர் எடுத்துச் செல்வதை அவதானித்த பிறிதொரு முச்சக்கரவண்டி சாரதி, அதன் உரிமையாளருக்கு குறித்த முச்சக்கரவண்டியை ஒருவர் எடுத்துச் செல்வதை தெரியப்படுத்தியிருந்தார்.

இதனையடுத்து, அதன் உரிமையாளரும், அருகில் நின்றோரும் குறித்த நபரை விரட்டிச்சென்று வவுனியா நீதிமன்றத்திற்கு அண்மித்ததாக மடக்கிப் பிடித்ததுடன், வவுனியா பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியிருந்தனர்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸாரிடம் மடக்கிப் பிடித்த குறித்த நபரை ஒப்படைத்தனர். கைதுசெய்யப்பட்ட நபரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், அவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## கொக்குத்தொடுவாயில் தமிழ் மக்களின் பெரும்போக நெற்செய்கைக்குத் தடை;

### நிலைமைகளை நேரில் சென்று பார்வையிட்டார் ரவிகரன்



(முல்லைத்தீவு நிருபர்)

முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் கமநலசேவை நிலையப் பிரிவிற்குட்பட்ட கன்னாட்டி, பாலங்காடு பகுதிகளில் தமிழ் மக்கள் தமது பூர்வீக விவசாயக் காணிகளைத் துப்புரவுசெய்து பெரும்போக நெற்செய்கைக்கான தயார்ப்படுத்தலில் ஈடுபட்டுள்ளனர்.


இந்நிலையில், தமது விவசாய நடவடிக்கைகளுக்கு தடை ஏற்படுத்தப்படுவதாக அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை, கொக்குத்தொடுவாய் கமக்கார அமைப்பினர் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரனுக்கு இது தொடர்பில் தெரியப்படுத்தியிருந்தனர்.

அந்தவகையில் நேற்று முன்தினம் (12) குறித்த இடத்திற்கு ரவிகரன் நேரடியாகச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டதுடன், உரியவர்களிடம் இது தொடர்பில் தெரியப்படுத்தி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

## உள்ளூராட்சி மன்றங்களின் ஆயுளை ஒரு வருட காலத்துக்கு நீடிக்க வேண்டும்

### மாத்தளை மாநகர முதல்வர் பிரகாஷ் கோரிக்கை



(மாத்தளை செய்தியாளர்)

2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த திட்டமிட்டிருப்பதை நிறுத்திவிட்டு நடைமுறையிலிருக்கும் உள்ளூராட்சி மன்றங்களின் காலத்தை மேலும் ஒரு வருடகாலத்திற்கு நீடித்திட அரசும் தேர்தல்கள் ஆணைக்குழுவும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென மாத்தளை மாநகர முதல்வர் சந்தனம் பிரகாஷ் தெரிவித்தார்.

மாத்தளை மாநகர சபையின் மாதாந்த பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் மாலை மாநகர சபையின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்ற போதே மாநகர முதல்வர் சந்தனம் பிரகாஷ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் 2018ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் காலம் கடந்த 2021ஆம் ஆண்டு முடிவுற்ற போதும் அரசு மேற்படி உள்ளூராட்சி மன்றங்களின் ஆயுள் காலத்தை ஒரு வருடத்தால் நீடித்தமை குறிப்பிடத்தக்கது. அரசு உள்ளூராட்சி மன்றங்களில் ஆயுள் காலத்தை ஒரு வருடமாக அதிகரித்தபோதும் குறிப்பிட்ட அந்த ஒரு வருட காலத்திற்குள் மக்களுக்கு தேவையான எந்தவொரு சேவைகளையோ அபிவிருத்திப் பணிகளையோ எம்மால் முன்னெடுத்து செல்லமுடியாமல் போய்விட்டது. இந்நிலை மாத்தளை மாநகர சபைக்கு மாத்திரமன்றி நாட்டின் நாலா திசைகளில் இருக்கும் சகல உள்ளூராட்சி மன்றங்களும் இதே நிலைக்கு முகம் கொடுத்தன என்பதை நான் இங்கு சுட்டிகாட்ட விரும்புகின்றேன்.

நீடிக்கப்பட்ட ஒரு வருடகாலத்திற்குள் கொவிட்-19 காரணமாக முழு நாடும் முடக்கப்பட்ட நிலையில், மாநகர சபையின் மக்கள் சேவைகளை நிறைவேற்ற முடியாது, அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ள முடியாது நாமும் வீட்டுக்குள் முடக்கப்பட்டிருந்தோம். இந்தக் கால எல்லையில் நாட்டில் அரசியல், பொருளாதார, சமூகப் பணிகள் அதலபாதாளத்திற்கு தள்ளப்பட்டு நாட்டின் நிலைமை மிகவும் கேள்விக்குறியான நிலையில் உள்ளூராட்சி மன்றங்களின் பணிகளும் கேள்விக்குறியாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும். உள்ளூராட்சி மன்றங்களின் காலம் ஒரு வருடமாக அதிகரிக்கப்பட்டபோது மக்களுக்கு இதனால் எந்தவித பிரயோஜனமும் ஏற்படவில்லை.

திடீரென 2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் நடத்தப்பட்டால் எம்மால் மக்களிடம் போய் வாக்குகளை கேட்பது இயலாத காரியமாகும். 2018ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் பணிகள் திட்டமிட்டவாறு தொடர்ந்து இடம்பெற்றபோதும் கொவிட்-19 காரணமாக நாட்டின் முடக்கத்தன்மை உள்ளூராட்சி மன்ற பணிகளுக்கு தடையாகவும், சவாலாகவும் மாறி விட்டது. எனவே, 2018ஆம் ஆண்டு திட்டமிட்ட எமது மக்கள் பணிகள் முற்றுப்பெற வேண்டுமானால் தற்போதைய உள்ளூராட்சி மன்றங்களின் ஆயுள் காலத்தை மேலும் ஒரு வருட காலத்திற்கு நீடிக்க வேண்டுமென்பதை அரசுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் நான் பணிவாக வேண்டிக்கொள்கின்றேன்.

எனது இந்தக் கருத்தை அண்மையில் இடம்பெற்ற மாநகர முதல்வர்கள் மாநாட்டில் தெரிவித்திருந்தேன். இதன்போது கூட்டத்திற்கு சமூகம் அளித்திருந்த மாநகர முதல்வர்களும் ஆதரித்து கருத்துத்தெரிவித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே, 2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடத்தப்படும் திட்டத்தை மாற்றிக்கொண்டு மேலும் ஒரு வருடகாலத்திற்கு உள்ளூராட்சி மன்றங்களின் ஆயுள் காலத்தை நீடிக்க வேண்டுமென மாத்தளை மாநகர முதல்வர் சந்தனம் பிரகாஷ் மேலும் தெரிவித்தார்.

## ஏ.டி.எம். அட்டையைத் திருடி பொருள் வாங்கியவர் கைது

(கண்டி செய்தியாளர்)

கட்டுகஸ்தோட்டை – குருநாகல் வீதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த மோட்டார் வாகனம் ஒன்றிலிருந்து ஏ.டி.எம். அட்டை ஒன்றைத் திருடி ஒரு இலட்ச ரூபாவுக்கும் மேற்பட்ட தொகைக்கு நவீன சந்தைகளில் பொருட்கள் வாங்கிய சந்தேக நபர் ஒருவரை கட்டுகஸ்தோட்டை பொலிஸார் நேற்று முன்தினம் கைதுசெய்துள்ளனர்.

வத்துவல என்ற இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனம் ஒன்றில் இருந்து இந்த அட்டையைத் திருடிய நபரை கண்காணிப்புக் கெமராக்களின் உதவியுடன் பொலிஸார் அடையாளம் கண்டு பின்னர் கைதுசெய்துள்ளனர்.

சந்தேக நபரால் திருடப்பட்ட அட்டை மூலம் கொள்வனவு செய்யப்பட்டதாகக் கருதப்படும் 800 சிகரட்டுகள் மற்றும் விலை உயர்ந்த ஒரு ஜோடி பாதணி உட்பட பல பொருட்ளை பொலிஸார் மீட்டுள்ளனர். அவற்றின் பெறுமதி சுமார் ஒரு இலட்ச ரூபா எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டி மற்றும் கட்டுகஸ்தோட்டைப் பிரதேசங்களில் உள்ள சுப்பர் மார்க்கட்டுகளில் சந்தேக நபர் மேற்படி பொருட்களை கொள்வனவு செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் கட்டுகஸ்தோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## உலருணவுப் பொதிகள் வழங்கிவைப்பு




(தலவாக்கலை செய்தியாளர்)

இலங்கை சேவா சர்வதேச அறக்கட்டளை ஊடாக சேவா அமெரிக்க நிதியுதவியுடன் பெண் தலைமைத்துவம் ஏற்று நடத்தும் தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

தலவாக்கலை பிரதேசத்தை சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட 30 குடும்பங்களுக்கு தலா 35 கிலோ அரிசி மற்றும் 15 கிலோ மா என்ற அடிப்படையில் இப்பொதிகள் வழங்கப்பட்டன.

இலங்கை சேவா சர்வதேச அறக்கட்டளையின் தலைவர் விஜயபாலன் தலைமையில் இப்பொதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. இந்நிகழ்வில் இலங்கை சேவா சர்வதேச அறக்கட்டளையின் இணைச் செயலாளர் சாந்தகுமார், நுவரெலியா வலயக் கல்விப் பணிப்பாளர் லசந்த அபேரட்ண, நுவரெலியா கல்வி வலயத்தின் மேலதிக கல்விப் பணிப்பாளர் மோகன்ராஜ் ஆகியோர் இந்தப் பொதிகளை பயனாளிகளுக்கு வழங்கிவைத்தனர்.

## துப்பாக்கிகளுடன் இருவர் கைது

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)


கலவான பகுதியில் இரு துப்பாக்கிகளுடன் இரண்டு சந்தேக நபர்கள் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கலவான கோணகலகந்த பிரதேசத்தை சேர்ந்த சந்தேக நபர் ஒருவர் கைதுசெய்யப் பட்டதுடன், அவருடன் தொடர்புடைய மற்றுமொருவர் கோணமுல்ல பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், இரு துப்பாக்கிகளும் மீட்கப்பட்டுள்ளன.

நாட்டின் பல இடங்களில் இடம்பெற்று வரும் நாசகாரச் செயல்களுக்கு இவை பயன்படுத்தப்பட்டுள்ளனவா என பல கோணங்களில் விசாரணை இடம்பெற்று வருவதாகவும் இவர்கள் இருவரும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## தேயிலை மலைக்குள் சிக்கிய சிறுத்தை பாதுகாப்பாக மீட்பு



(க. கிஷாந்தன்)

பொகவந்தலாவ – செப்பல்ட்டன் தோட்டத்தின் மேற்பிரிவில், மூன்று அடி நீளமான ஆண் சிறுத்தைப் புலியொன்று தேயிலை மலைக்குள் சிக்கி, தப்பிக்க முடியாமல் சுமார் 8 மணிநேரம் தவித்தது. இதனையடுத்து மயக்க ஊசி செலுத்தப்பட்டு அது உயிருடன் மீட்கப்பட்டது.

மேற்படி தோட்டத்தில் சிறுத்தைப்புலி சிக்கி யிருப்பதை அறிந்த தோட்டத் தொழிலாளர்கள் அது தொடர்பில் நேற்று முன்தினம் (12.10.2022) காலை தோட்ட அதிகாரிக்கு தகவல் வழங்கியுள்ளார்கள். பின்னர் அதிகாரி பொகவந்தலாவ பொலிஸாருக்கு தெரியப்படுத்தினார். அதன் பின்னர் பொலிஸார் ஊடாக நல்லதண்ணி வனவிலங்கு அதிகாரிகளுக்கு தகவல் வழங்கப்பட்டது. இதனையடுத்து பொலிஸார், வனவிலங்கு அதிகாரிகள் ஆகியோர் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். தோட்ட மக்களும் குவிந்தனர்.

மரக்கறித் தோட்டமொன்றில், மிருகங்களிட மிருந்து விளைச்சலை பாதுகாக்கும் நோக்கில் போடப்பட்டிருந்த கம்பி வலையிலேயே இச்சிறுத்தைப்புலி சிக்கியுள்ளது என்பதுடம், மக்கள் நடமாட்டத்தை கண்டதும் வலையை பிய்த்துக்கொண்டு தேயிலை மலைப்பகுதியில் சிக்கியுள்ளது. கம்பியில் சிக்கிய சிறுத்தைப்புலி தேயிலை மலைப்பகுதியில் தப்பிக்க முடியாமல் சிக்கிக்கொண்டது. அதன் பின்னர், ரந்தெனிகல மிருக வைத்தியசாலையிலிருந்து, மிருக வைத்திய அதிகாரி வரழைக்கப்பட்டு, துப்பாக்கி மூலம் மயக்க மருந்து ஊசி செலுத்தப்பட்டு, சிறுத்தைப் புலி பாதுகாப்பாக மீட்கப்பட்டது. சிகிச்சைகளுக்காக மினிப்பே மிருக வைத்தியசாலைக்கு அது கொண்டு செல்லப்பட்டது. குணமடைந்த பின்னர் சரணாலயத்தில் விடப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

## தனியாகத் தவித்த சிறுத்தைக் குட்டிகள் அதிகாரிகளால் தாய்ப் புலியிடம் சேர்ப்பு



(க. கிஷாந்தன்)

ஹட்டன் – டிக்கோயா இன்ஜெஸ்ட்ரி தோட்டத்தில் உயிருடன் மீட்கப்பட்ட இரண்டு சிறுத்தைப் புலிக்குட்டிகளை வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தாய் சிறுத்தையிடம் சேர்த்துள்ளனர்.

பிறந்து பத்து நாட்களேயான, நல்ல உடல் ஆரோக்கியத்துடன் ஆண் மற்றும் பெண் என இரண்டு சிறுத்தைக் குட்டிகள் இன்ஜெஸ்ட்ரி தோட்டத்தில் தேயிலை மலையில் இருப்பதை அப்பகுதியில் வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளர்கள் கண்டுள்ளனர்.

இதனையடுத்து, தொழிலாளர்கள், தோட்ட அதிகாரியிடம் தெரிவித்துள்ளனர். தோட்ட அதிகாரி உடனடியாக நல்லதண்ணி வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு இது குறித்து தகவல் வழங்கியுள்ளார். அதன் பின்னர் வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் சிறுத்தைப் புலிக்குட்டிகளை பாதுகாப்பாக மீட்டு தாய் சிறுத்தையிடம் சேர்க்கத் தேவையான நடவடிக்கையை எடுத்துள்ளனர்.

அதன் பின்னர் தாய் சிறுத்தை சுற்றித் திரிவதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதனையடுத்து, சுமார் ஒரு மணி நேரத்துக்குப் பிறகு தாய் சிறுத்தை வந்து முதலில் ஆண் சிறுத்தைப்புலிக்குட்டியை எடுத்துச் சென்றதாகவும், சுமார் இரண்டரை மணி நேரத்திற்குப் பிறகு பெண் சிறுத்தைப்புலிக்குட்டியை வனப்பகுதிக்குச் எடுத்து சென்றதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# 90 ஆவது அகவையைக் கொண்டாடும்

# கொ/பம்பலப்பிட்டி புனித மரியாள் தமிழ் மகா வித்தியாலயம்

அகவை 90இல் காலடி எடுத்து வைத்த வெற்றியை கடந்த வியாழக்கிழமை (13.10. 2022) கொண்டாடிய கொழும்பு பம்பலப்பிட்டி புனித மரியாள் தமிழ் மகா வித்தியாலயம் நாளைய தினம் தனது நடைபவனியை காலை 08.00 மணிக்கு வித்தியாலய முன்றலிலிருந்து ஆரம்பிக்கவுள்ளது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் அனைவருக்கும் அறியத்தரும் இவ்வேளையில், எமது வித்தியாலய அன்னையின் வரலாற்றினையும் நாம் கூறுவது தகுமே.

எமது வித்தியாலயமானது, இலங்கையின் தலைநகரான கொழும்பு மாநகரிலே குறுகிய வளத்தைக்கொண்டு, உச்சப்பயனை வழங்கி, அன்னை மரியாவைப் பாதுகாவலியாகக் கொண்டு, ஒன்பது தசாப்தங்களாகத் தலைநிமிர்ந்து நிற்கும் 1C வகைப் பாடசாலையாகும்.

### அமைவிடம்

கொழும்பு மாவட்டம், பம்பலப்பிட்டி நகர், மிலாகிரிய கிராம சேவகர் பிரிவில், புனித மரியாள் ஆலயத்துடன் இணைந்ததாக எமது வித்தியாலயம் அமைந்துள்ளது.

### ஆரம்பம்

★ 25.09.1926இல் எமது வித்தியாலயம் பம்பலப்பிட்டி புனித மரியாள் ஆலயத்தின் கோயிற்பற்று பாடசாலையாக, சிங்களம், தமிழ் ஆகிய இரண்டு மொழிகள் மூலமும் இணைந்து, திருக்குடும்ப சபை அருட்சகோதரிகளின் வழிகாட்டலில், கத்தோலிக்க மத ஸ்தாபன நிர்வாகத்தின் கீழ் பரிபாலிக்கப்பட்டதற்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன. 1927இல் 56 மாணவர்கள் காணப்பட்டுள்ளனர்.

★ 1932ஆம் ஆண்டில் எமது வித்தியாலயமானது சம்பவத்திரட்டுப் புத்தகத்திலே பதிவு செய்யப்பட்டு, தமிழ்ப் பாடசாலையாக ஒரு நிர்வாகக் கட்டமைப்பிற்குள் வந்துள்ளது. இக்காலத்தில் அருட்சகோதரி மேரி மனுவலா தலைமையில் 06 ஆசிரியர்களின் வழிகாட்டலுடன் 100 மாணவர்களைக் கொண்டதொரு சிறிய தமிழ்ப் பாடசாலையாக கத்தோலிக்க மத ஸ்தாபனத்தால் நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளது.

★ 05.12.1932 இல் பாடசாலையைத் தரிசித்த பரீட்சகர் "இப்பகுதியில் காணப்பட்ட தமிழ்ப் பாடசாலை இது ஒன்றேயாகையால், இப்பாடசாலை நன்மையளிக்கின்றது" எனக் குறிப்பிட்டமையானது எமக்குப் பெருமகிழ்வைத் தருகின்றது.


★ 1963ஆம் ஆண்டில் எமது வித்தியாலயத்தை அரசு பொறுப்பேற்றிருந்தாலும் அருட்சகோதரிகளினாலேயே வழிநடத்தப்பட்டுவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

★ 1971இல் 674 மாணவர்களும் 24 ஆசிரியர்களும் இருந்துள்ளனர். இவ்வாறாக, 1996 காலப்பகுதியில் 1200 மாணவர்களும் காணப்பட்டுள்ளனர்.

★ 07.06.1996இல் முதன்முதலாக அலுவலக உதவியாளர் ஒருவர் நியமனம் பெற்று வந்தார்.

★ தற்போது எமது பாடசாலையில் 300 மாணவர்களும் 33 ஆசிரியர்களும் 3 கல்விசாரா ஊழியர்களும் காணப்படுகின்றனர்.

### வித்தியாலய இலச்சினை




**வீணை**
**ஏட்டுச்சுவடி**
**லில்லி மலர்**
**மெழுகுத்திரி**

ஆகியவை எமது வித்தியாலய இலச்சினையில் காணப்படுகின்றன.

இன்னிசை மீட்டும் இதமான உள்ளத்துடன் கல்வி என்னும் அறிவைப் பெற்று, வெண்மையானதும் தூய்மையானதுமான லில்லி மலர் போல் இனிமையான மணம் கமழ்ந்து, உலகின் ஒளியாகப் பிரகாசிப்போம்.

### கட்டடம்

★ ஆரம்பத்தில் ஆலயத்தின் ஒரு பகுதியில் சிறிய கொட்டகையில் எமது வித்தியாலயம் இயங்கியது.

★ 20.11.1933இல் புதிய கட்டடத்தில் இயங்கத் தொடங்கியது.

★ 08.05.1968இல் 60' X 20' புதிய கட்டடம் பாவனைக்கு எடுக்கப்பட்டது.

★ 30.05.1978இல் பாடசாலைக் கட்டடத்தின் ஒரு பகுதியில் ஏற்பட்டுள்ள வெடிப்பு அபாய நிலை காரணமாக இரு நேரப் பாடசாலைகளாக இயங்கின.

★ 1978இல் மதில் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

★ 29.10.1980இல் 2 மாடிக் கட்டடம் எழுப்பப்பட்டது.



**வித்தியாலய ஆசிரியர் குழாம் – 2022**

**இருத்தல் (இ-வ):** திருமதி ரி.கோகுலராணி (பகுதித் தலைவர்), திருமதி எம்.தில்லைநாதன், திருமதி ஏ.பத்மநாதன், திரு.ஏ.ஹேமானந் (அதிபர்), திரு.ரி.நித்தியானந்தன், திருமதி பி.ஸ்ரீரவீந்திரன் - (பகுதித் தலைவர்), செல்வி யு.சீனிவாசகம், திருமதி.எம்.கர்ணன் (பகுதித் தலைவர்)

**நிற்றல் 1ஆம் வரிசை (இ-வ):** திருமதி ஏ.சஞ்சீஸ்வரன், திருமதி ஜி.பிரபாகரன், திருமதி வி.உமாமகேசன், திருமதி ஏ.வி.ஏ.உதயகுமார், திருமதி கே.கோகிலகுமார், திருமதி எஸ்.பிரேமலிங்கம், திருமதி கே.பேரின்பராசா, திருமதி வி.விமலன், திருமதி ஜே.ஜே.மரியதாசன் (பகுதித் தலைவர்), திருமதி ஜே.ஆர்.பிரியதர்ஷனி.

**நிற்றல் 2ஆம் வரிசை (இ-வ):** திரு.ஆர்.சஞ்ஜீவன், திருமதி எம்.கணேசலிங்கம், திருமதி பி.ராஜேந்திரன், திருமதி எஸ்.கஸ்தூரி, செல்வி பி.கணேஸ்குமாரி, திருமதி ஆர்.ஜெஸ்லின், செல்வி எஸ்.தாரணி, திருமதி எஃப்.டி.டானியல், திருமதி.என்.சுபாஷினி, திரு.வி.ஜெயநேசன்.

### வித்தியாலயப் பெயர்

★ ஆரம்பத்தில் கொ/புனித மரியாள் வித்தியாலயமாக இருந்தது.

★ 1974இல் கொ/றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் வித்தியாலயம் என்ற பெயரை ஏற்றது.

★ 30.07.2002இல் கொ/புனித மரியாள் தமிழ் மகா வித்தியாலயம் என வைபவ ரீதியாகப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

### தரங்கள் உருவாகிய விதம்

★ 1986 வரை 1 - 11 வரையான தரங்கள் காணப்பட்டன.

★ 1987இல் க.பொ.த. உயர்தர வர்த்தகப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

★ 1996இல் க.பொ.த. உயர்தர கலைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

★ தற்போது தரம் 1 முதல் 13 வரையான தரங்களும், உயர்தரத்தில் கலை, வர்த்தகப் பிரிவுகளும் காணப்படுகின்றன.

## அதிபர்கள்

அருட்சகோதரி மேரி மனுவேலா
1932 - 1936

அருட்சகோதரி மேரி றோஸ்
1936 - 1936

அருட்சகோதரி மேரி லிகோரி
1937 - 1939
1944 - 1945

அருட்சகோதரி மேரி பிளேவி
1940 - 1944

அருட்சகோதரி மேரி பிறிஸ்கா
1946 - 1950
1955 - 1955

அருட்சகோதரி மேரி திறினிற்றி
1951 - 1954
1956 - 1962



அருட்சகோதரி பியர் டேமியன்
1963 - 1981



அருட்சகோதரி பெற்றினில்லா
1982 - 1985



அருட்சகோதரி எம்.எம்.யூட் மடுத்தீன்
1985 - 1990



அருட்சகோதரி எம்.வில்பிரட்
1990 - 1997



அருட்சகோதரி எம்.மரிய ஸ்றெலா
1997 - 2007



அருட்சகோதரி அமிர்தராணி சேவியர்
2007 - 2014



திருமதி ஜே.எஸ்.அரியரட்ணம்
2014 - 2017



திருமதி பி.திலகநாதன்
2018 - 2019



திரு.ஏ.ஹேமானந்
2019 - இற்றைவரை

### எமது வித்தியாலயத்தால் ஏனையோர் அடைந்த நன்மைகள்

★ ஞாயிறு மறைப்பாடசாலை சனிக்கிழமைகளில் நடத்தப்பட்டன.

★ 1983இல் ஏற்பட்ட இனக் கலவரத்தினால் கொழும்பு இந்துக் கல்லூரி அகதி முகாமாக மாறியபோது ஏறத்தாழ ஒரு வருடம் பகுதி நேரப் பாடசாலையாக எமது பாடசாலையில் இயங்கியது.

★ 1990 காலப் பகுதியில் சிங்கள வித்தியாலயத்திற்கு புதிய கட்டடம் கட்டப்பட்டுக் கொண்டிருந்ததனால், எமது பாடசாலையில் பகுதி நேரப் பாடசாலை நடத்துவதற்கு இடமளிக்கப்பட்டது.

★ 1995 யுத்த காலத்தின்போது இடம்பெயர்ந்து கொழும்புக்கு வந்த மாணவர்களுக்குப் புகலிடமளித்து அவர்களைக் கல்வியில் மிளிர்ந்தொளிரச் செய்ததும் எமது பாடசாலையே.

★ எமது பாடசாலைக்கு கிடைக்கும் உதவிகளில் சிங்களமொழிப் பாடசாலைக்கும் பகிரப்படுதல். **உதாரணம் : மின்குமிழ்கள்**

### வெளியிடப்பட்ட நூல்கள்

★ **"அமல தீபம்"** - வருடாந்த பரிசளிப்பு விழா (பாடசாலையின் உயர்ச்சிக்கும் எழுச்சிக்கும் காரணமாக இருந்த இந்நூல் மாணவர்களின் சாதனைகளையும் உள்ளக் கிடக்கைகளையும் ஆக்கங்களாக ஏந்தி வருகின்றது.)

★ **"கலைக் கதம்பம்"** - தமிழ் இலக்கிய மன்றம் (1995ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை தொடரப்படுகின்றது.)

★ **"இறை ஒளி"** - கிறிஸ்தவ மன்றம்

★ **"விஞ்ஞானக் கதிர்"** - விஞ்ஞான மன்றம்

★ **"விருட்சம்"** - வணிக மன்றம்

★ **மாணவ தலைவர் நூல்கள்**

(நாட்டின் சீரற்ற நிலைமை காரணமாக இவற்றுள் சில நூல்கள் வெளியிட முடியாத சூழ்நிலை காணப்படுகின்றது என்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவிக்கின்றோம்.)



**வித்தியாலய மேரியன் செயற்குழு - 2022**

**இருத்தல் (இ-வ):** திருமதி பிரான்சிஸ்கா டொறின் டானியல் - செயற்குழு, திரு.எம்.ஜஸ்ரின் கான் - பொருளாளர், செல்வி அ.சைலஜா - செயலாளர், திரு.எஸ்.பெனடிக்ற் - உபதலைவர், திரு.ஏ.ஹேமானந் - தலைவர்/அதிபர், திரு.ஜே.ஜேக்கப் - சிரேஸ்ட உபதலைவர், திரு.எஸ்.அலெக்சாண்டர் - உப செயலாளர், செல்வி வி.துஷாந்தி - உப பொருளாளர், திரு.ஜி.கிறிஸ்ரோப்பர் - செயற்குழு.

**நிற்றல் (இ-வ) :** செயற்குழு அங்கத்தினர் திரு.ஆர்.ஜே.அன்டர்சன், திரு.ஜே.ஜெரால்ட், திரு.எம்.லோறன்ஸ், திரு.ஆர்.மகேந்திரன், திரு.ஜே.கிங்ஸ்லி, திரு.ஆர்.ஸ்ரீவன் லலித், திரு.எஸ்.சுதர்சன், திரு.எஸ்.விஜேந்திரன். சமுகமளிக்காதவர்: திரு.எஸ்.பி.டினேஷ்.

### இணைப்பாடவிதான செயற்பாடுகள்

★ ஆன்மீக செயற்பாடுகள்

**கத்தோலிக்கர்:**
† அருளடையாளங்கள் வழங்கப்பட்டன. (ஒப்புரவு, முதல் தேவநற்கருணை, உறுதிப்பூசுதல்)
† திருப்பலி ஒப்புக்கொடுக்கப் படுகின்றன.
† தவக்கால தியானங்கள் நடைபெறுகின்றன.

**இந்துக்கள்:** தியானங்கள் நடைபெறுகின்றன.

★ விளையாட்டுப் போட்டி: இல்ல மெய்வல்லுநர் போட்டி
உள்ளக விளையாட்டுக்கள்
★ கராத்தே,
★ குத்துச்சண்டை, கிக் குத்துச்சண்டை,
★ கரம்,
★ மேசைப்பந்து,

★ பரிசளிப்புவிழா ★ மாணவர் மன்றம்
★ சிறுவர் தினம் ★ கலைவிழா
★ கிறிஸ்தவ மன்றம் ★ ஆசிரியர் தினம்
★ ஒளிவிழா ★ விஞ்ஞான மன்றம்
★ கல்விச் சுற்றுலா ★ வாணிவிழா
★ வர்த்தக மன்றம்

### வித்தியாலயம் வெற்றியீட்டிய சாதனைகள்

★ தமிழ்மொழித் தினம், ஆங்கில தினம், விளையாட்டுப் போட்டிகளில் கோட்டம், வலய, மாகாண மட்டங்களில் சான்றிதழ்களும் பதக்கங்களும் பெற்றுள்ளமை.

★ அகில இலங்கை மேலைத்தேய சங்கீதப் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்றுள்ளனர்.

★ புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்தி கொழும்பில் பிரபல்யமான பாடசாலைக்குச் செல்வதற்கான வாய்ப்புகள் கிட்டுகின்றமை.

★ உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பல மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

★ இங்கு கல்வி கற்ற மாணவர்கள் துறவறம், ஆசிரியர், கணக்கியல், மருத்துவம், பொறியியல், மாநகர சபை, முகாமைத்துவம், வணிகம் ஆகிய துறைகளிலும் எழுத்தாளர், நடிகர், பாடகர், அறிவிப்பாளர் என இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ்த் துறைகளிலும் சிறந்து விளங்குகின்றனர்.

### வித்தியாலயத்திற்கு உதவிகள் கிடைக்கும் மூலங்கள்

★ பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
★ பழைய மாணவர்கள்
★ புனித மரியாள் ஆலயம் - உடற்பயிற்சி செய்வதற்கான இடம்


எமது பாடசாலை தன்னிடம் காணப்படும் பற்றாக்குறைகளை இயன்றளவில் நிவர்த்தி செய்து, மேலும் பல வெற்றிகளையீட்டி, சாதனைகளை நிலைநாட்டி, தலைநகரில் தன்னிகரில்லாத் தலைவனாக மிளிர்ந்தொளிர்ந்து நூற்றாண்டு விழாக்காண ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றோம்.

எமது பாடசாலையின் 90ஆவது அகவை நிறைவு விழாவினை இனிய முறையில் நிறைவேற்றிய எம் இறைவனை நன்றியோடு நினைவுகூரும் இவ்வேளையில், வியாழக்கிழமை நடந்தேறிய விழாவிற்கும் நாளைய நடை பவனிக்கும் சகல வழிகளிலும் அளப்பரிய உதவிகளைப் புரிந்துகொண்டிருக்கும் பல்வேறு நிலைகளிலுள்ள பழைய மாணவர்களுக்கு நாம் எவ்வளவுதான் நன்றியைக் கூறினும் அது மிகையாகாது. அத்துடன் இலங்கை பத்திரிகை வாசகர்கள் மத்தியில் எமது வித்தியாலயத்தின் நாமத்தை எடுத்துச்செல்லும் 'தமிழன்' பத்திரிகைக்கு எமது விசேட நன்றிகள்.

எமது வித்தியாலய 90ஆவது அகவை நிகழ்விற்கு ஊடகப் பங்களிப்பு நல்கிய இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், நேத்ரா தொலைக்காட்சி ஆகிய அலைவரிசைகளுக்கும் இதனை ஒழுங்கமைத்த எமது வித்தியாலயத்தின் பழைய மாணவரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அறிவிப்பாளரும் நிகழ்ச்சி தயாரிப்பாளருமாகிய சிவராஜா தக்கீஷனுக்கும் எமது வித்தியாலய நிர்வாகம், பாடசாலை அபிவிருத்திக் குழு, பழைய மாணவர் சங்கம் சார்பில் எமது நன்றிகள் உரித்தாகுக.

**திருமதி பிரான்சிஸ்கா டொறின் டானியல்**
**செல்வி அருளப்பன் மேரி சைலஜா**
**பழைய மாணவர்**

# தகவல் அறியும் உரிமைச் சட்டமும் அபிவிருத்தி தொடர்பான தகவல் வெளிப்பாடும்




(எட்வேட் உதயதாஸ் -வெரிட்டே ரிசர்ச்)

ஓர் அரசாங்கம் தனது ஆட்சிக்காலத்தில், உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்காக பெருந்தொகைப் பணத்தைச் செலவிடுகின்றது.

ஆட்சிக்கு வருகின்ற ஒவ்வொரு அரசாங்கமும் தனது பதவிக்காலத்தில் பல்வேறுபட்ட சிறிய மற்றும் பாரிய உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றன. ஆனால், அவ்வாறு நடைமுறைப்படுத்தும் திட்டங்கள் தொடர்பில் வெளிப்படைத்தன்மை பேணப்படுகின்றதா என்ற கேள்வி எழுகின்றது. இவை தொடர்பில் பொதுமக்கள் எந்தளவிற்கு விழிப்புணர்வோடு இருக்கின்றார்கள் என்று பார்த்தால், இது அரசாங்கத்தின் வேலை என்று பெரும்பாலானோர் கடந்து செல்வதுதான் நிஜம்.

வெளிப்படைத்தன்மையற்ற முடிவுகள் எடுக்கப்பட்டதும் ஊழல் நிறைந்த திட்டங்களை பாரிய கடன் சுமைகளுடன் செயல்படுத்தியதும் தற்போது இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு வழிவகுத்த காரணிகளில் முக்கிய விடயங்களாக அமைகின்றன எனப் பொருளியலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்கத் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி, 1,00,000 அமெரிக்க டொலருக்கு அதிகமாகவுள்ள வெளிநாட்டு நிதியுதவித் திட்டங்களை மையப்படுத்திய திட்டங்கள் மற்றும் ரூ. 5,00,000இற்கு அதிகமான தொகையைக்கொண்ட உள்ளூரில் நிதியளிக்கப்படும் திட்டங்கள் குறித்து அவை தொடங்குவதற்கு குறைந்தது மூன்று மாதங்களுக்கு முன்னதாக அதற்குப் பொறுப்பான அமைச்சர் முன்கூட்டியே தகவல்களை வெளிப்படுத்த வேண்டும். அதாவது, தகவல்கள் டிஜிட்டல் இலத்திரனியல் வடிவத்தில் அமைச்சின் இணையத்தளத்தில் தமிழ், சிங்களம் முடியுமானால் ஆங்கிலத்திலும் வெளியிடப்பட வேண்டும்.

பாரிய உட்கட்டமைப்புத் திட்டங்கள் குறித்த தகவல்களை முன்கூட்டியே வெளிப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவம் குறித்து பொதுமக்கள் மற்றும் அரச முகவரகங்களுக்குஇடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் உட்கட்டமைப்பு கருத்திட்டக் கண்காணிப்பான் தகவல்களை வழங்குகின்றது.

2019ஆம் ஆண்டிற்கும் 2021ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் 60 பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இதில் குறிப்பாக, வடக்கு கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் அவற்றின் வெளிப்படைத் தன்மை மிக மிகக் குறைவாகும்.

இந்த 60 திட்டங்களில் 5 திட்டங்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களை மையப்படுத்தியவை. அவை தொடர்பான விவரங்களும் வெளிப்பாட்டுத் தன்மையும் பின்வருமாறு:

1) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மோதல்களால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு 29,702 மில்லியன் ரூபா செலவில் திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோதும், கிராமிய வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருட் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் இணையதளத்தில் எந்தவிதத் தகவல்களும் காணப்படவில்லை.

2) நீர்ப்பாசன அமைச்சின்கீழ் முன்னெடுக்கப்பட்ட 13,264 மில்லியன் ரூபா பெறுமதியான வடமராட்சி களப்பின் நீர்வளத்தை விருத்திசெய்து யாழ்ப்பாண குடாநாட்டிற்கு குடிநீர் வழங்கல் திட்டம் தொடர்பில் எவ்வித தகவல்களும் வெளியிடப்படவில்லை.

3) சுகாதார அமைச்சின்கீழ் முன்னெடுக்கப்பட்ட நெதர்லாந்து அரசாங்க நிதியுதவியில் 12,225 மில்லியன் ரூபா பெறுமதியான வடமாகாணத்தில் வைத்தியசாலைகளின் அபிவிருத்தித் திட்டம் தொடர்பில் 22 வீதமான தகவல் வெளிப்பாட்டுத்திறன் பதிவாகியுள்ளது.

4) நகர அபிவிருத்தி, கடலோரப் பாதுகாப்பு, கழிவுப்பொருள் வெளியேற்றம் மற்றும் துப்புரவு ஏற்பாட்டு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சின் கீழ் முன்னெடுக்கப்பட்ட 2,350 மில்லியன் ரூபா பெறுமதியான யாழ்ப்பாணம் நகர மண்டபத்தை புனரமைக்கும் திட்டம் தொடர்பில் 31 வீதமான தகவல் வெளிப்பாட்டுத்திறன் பதிவாகியுள்ளது.

5) கிராமிய வீடமைப்பு, நிர்மாணத் துறை மற்றும் கட்டடப் பொருட் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் கீழ் முன்னெடுக்கப்பட்ட 1,280 மில்லியன் ரூபா பெறுமதியான வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மோதல்களால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குப் புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய கொங்கிறீட் பெனல் வீடுகளை நிர்மாணிக்கும் திட்டம் தொடர்பில் எவ்வித தகவல்களும் இணையதளத்தில் வெளியிடப்படவில்லை.

ஊழலற்ற, நேர்மையான அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படுவதும் அத்திட்டங்கள் தொடர்பான வெளிப்படுத்தன்மையும் மிக முக்கியமானதாகும்.

வருமானத்தை விட செலவினம் அதிகமாகவுள்ள இலங்கையின் பொருளாதாரச் சூழலில் ஊழலற்ற திட்டங்கள் பொது மக்களுக்கும் நாட்டுக்கும் மிகவும் நன்மை பயக்கக்கூடியவை.

# பிரபல ஆங்கில எழுத்தாளர் அல்ஹாஜ் சித்திக் காலமானார்

ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் மூத்த உறுப்பினரும் பிரபல ஆங்கில எழுத்தாளருமான அல்ஹாஜ் சித்திக் கவுஸ் (வயது 73) கனடா டொரன்டோவில் அண்மையில் காலமானார். இவரது ஜனாஸா டொரன்டோவில் இடம்பெற்றது.

இவருக்காக ஜூம்மாஆத் தொழுகையின் பின் வெள்ளவத்தை ஜும்மா பள்ளிவாசலில் ஜனாஸா தொழுகை இன்று நடைபெறவுள்ளது.

மர்ஹும் கவுஸ் முஸ்லிம் மீடியா போரத்தின் பத்திரிகை ஆசிரியர் மற்றும் செயற்குழு உறுப்பினர் பதவிகளை வகித்து போரத்தின் வளர்ச்சிக்கு அளப்பரிய பங்காற்றியுள்ளார்

பிரபல ஆங்கில எழுத்தாளரான இவர், தேசிய பத்திரிகைகளில் இஸ்லாம் மற்றும் தற்கால விவகாரங்கள் பற்றி நூற்றுக்கணக்கான கட்டுரைகளை எழுதியுள்ளார். இவரது மறைவு குறித்து முஸ்லிம் மீடியா போரம் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துள்ளது.

# தென்மராட்சி கல்வி வலயத்தின் ஆசிரியர் தின விழா



(சாவகச்சேரி நிருபர்)

தென்மராட்சி கல்வி வலயம் நடத்திய ஆசிரியர் தின விழா நிகழ்வுகள் கொடிகாமம் நட்சத்திரமஹால் மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றிருந்தன.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் விருந்தினர்களாக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எம்.பிரதீபன் மற்றும் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

நிகழ்வின் ஓர் அங்கமாக ஓய்வுபெற்ற தென்மராட்சிக் கல்வி வலய அதிபர்கள், ஆசிரியர்கள் கௌரவிப்பு, ஆசிரியர் தினத்தை ஒட்டி வலய மட்டத்தால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய ஆசிரியர்கள் கௌரவிப்பு ஆகிய நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன.

மேலும் ஆசிரியர்களின் ஒழுங்கமைப்பில் குழு இசை, நாடகம் ஆகிய கலை நிகழ்வுகளும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# பாடசாலைகளுக்கிடையிலான 29ஆவது வலைப்பந்தாட்ட வெற்றிக் கிண்ணம் ஞாயிறன்று ஆரம்பம்

பாடசாலைகளுக்கிடையிலான 29ஆவது வலைப்பந்தாட்ட வெற்றிக் கிண்ணத்திற்கான போட்டிகள் எதிர்வரும் 16, 17 மற்றும் 18ஆம் திகதிகளில் காலி தடல்ல மைதானத்தில் நடைபெறவுள்ளன.




கல்வி அமைச்சின் வழிகாட்டுதலின்கீழ் இலங்கை பாடசாலைகள் வலைப்பந்தாட்ட சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள குறித்த பாடசாலை வலைப்பந்தாட்டப் போட்டியானது நெஸ்லே மைலோவின் அனுசரணையுடன் இடம்பெறுகின்றது.

2019ஆம் ஆண்டின் பின்னர் 2 ஆண்டுகளுக்கும் மேலான இடைவெளியின் பின்னர் தற்போது நடைபெறவுள்ள போட்டிகளில் கிட்டத்தட்ட 4 ஆயிரம் பாடசாலை விளையாட்டு வீராங்கனைகள் இம்முறை பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

13 வயதுக்குட்பட்ட, 15 வயதுக்குட்பட்ட, 17 வயதுக்குட்பட்ட மற்றும் 19 வயதுக்குட்பட்ட பிரிவுகளில் போட்டிகள் நடைபெறவுள்ளன. ஆரம்ப நிகழ்வானது நாளை மறுதினம் (16) காலை 9.00 மணிக்கு இடம்பெறவுள்ளதுடன், பிரதம விருந்தினராக கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் எச்.யு. பிரேமதிலக்க கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

நிறைவு வைபவமானது எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறவுள்ளதுடன், பிரதம விருந்தினராக கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஜே.ரணசிங்க கலந்து சிறப்பிக்கவுள்ளார்.




# த்ரில் வெற்றியுடன் ஆசியக்கிண்ண இறுதிப்போட்டிக்குத் தகுதிபெற்ற இலங்கை

பங்களாதேஷில் நடைபெற்றுவரும் எட்டாவது மகளிர் ஆசியக்கிண்ண இருபதுக்கு 20 கிரிக்கெட் தொடரில் நேற்று நடைபெற்ற 2ஆவது அரையிறுதி ஆட்டத்தில் பாகிஸ்தான் அணியை ஒரு ஓட்டத்தினால் வீழ்த்திய இலங்கை மகளிர் அணி இறுதிப்போட்டிக்குத் தெரிவானது.



போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்களை இழந்து 122 ஓட்டங்களைக் குவித்தது. 123 என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்கு ஆடிய பாகிஸ்தான் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 121 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வியை தழுவியது.

இதன் மூலம் நாளை நடைபெறும் சம்பியனை தீர்மானிக்கும் இறுதி ஆட்டத்தில் இலங்கை மகளிர் அணி, இந்திய மகளிர் அணியை எதிர்கொள்கிறது. இலங்கை மகளிர் அணி இதுவரையில் ஆசியக்கிண்ண சம்பியன் பட்டம் வெல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.










# மழையால் கைவிடப்பட்ட இலங்கையின் இரண்டாவது பயிற்சி ஆட்டம்



எட்டாவது ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடர் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகும் நிலையில், அதற்கு முன்னரான பயிற்சிப்போட்டியில் நேற்று நடைபெறவிருந்த இலங்கை – அயர்லாந்து அணிகளுக்கிடையிலான போட்டி மழை காரணமாக முழுமையாக கைவிடப்பட்டது.

உலகக்கிண்ணத் தொடருக்கு முன்னர் இலங்கை அணி இரு பயிற்சிப்போட்டிகளில் விளையாட திட்டமிடப்பட்டிருந்தது. முதல் போட்டியில் சிம்பாப்வே அணியை எதிர்கொண்ட இலங்கை அணி இலகு வெற்றிபெற்றது. அதனைத் தொடர்ந்து நேற்று மெல்போர்ன் ஜங்சன் ஓவல் மைதானத்தில் அயர்லாந்து அணியுடன் மற்றைய போட்டி திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும், மெல்போர்னில் பெய்த அடைமழை காரணமாக குறித்த போட்டி ஒரு பந்தும் வீசப்படாத நிலையில் முழுமையாக கைவிடப்பட்டது.




# ரசிகர்களுக்கு எச்சரிக்கை விடுக்கும் கட்டார்

(ரமணி)

பீபா உலகக்கிண்ணத் தொடரின் முதல் இரண்டு வாரங்களில் வளைகுடா மாநிலத்தின் தலைநகரில் ரசிகர்களின் தொகை அதிகமாக இருக்கும். அதனால் நெரிசல் ஏற்படுமென கட்டார் உலகக்கிண்ண அமைப்பாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

பல தெருக்களிலிருந்து தனியார் கார்கள் தடைசெய்யப்படும் மற்றும் சில மைதானங்களுக்கு அருகில் வசிப்பவர்கள் தங்கள் வீடுகளுக்குச் செல்ல அனுமதி தேவை. அமைப்பாளர்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகள் ஒரு செய்தியாளர் கூட்டத்தில் உலகக் கிண்ண நெரிசலைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை கோடிட்டுக் காட்டியுள்ளனர்.

எட்டு மைதானங்களில் ஐந்து மைதானங்களுக்கு சேவை செய்யும் அதிநவீன ஓட்டுனர் இல்லாத மெட்ரோ ரயில் வலையமைப்பிற்காக பில்லியன் டொலர்களை கட்டார் செலவிட்டுள்ளது. மேலும் 3,200 கூடுதல் பஸ்கள், 3,000 டாக்சிகள் என்பன சேவையில் இருக்கும். 29 நாட்களில் ஒரு மில்லியனுக்கும் அதிகமான ரசிகர்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், போட்டியின் முதல் இரண்டு வாரங்களில் ஒரு நாளைக்கு நான்கு குழு போட்டிகள் இருக்கும். மேலும் 3,00,000இற்கும் அதிகமான ரசிகர்கள் டோஹாவின் தெருக்களைச் சுற்றி மிகவும் தீவிரமான நாட்களில் ஒரேநேரத்தில் திரள்வார்கள் என்று அதிகாரிகள் கணித்துள்ளனர்.

# சிறுவர்களுக்கான ஓட்டத்தில் மேல், வடமேல் மாகாணங்கள் முதலிடம்







நெஸ்லே நெஸ்டமோல்ட் அனுசரணை யில் கடந்த சனி, ஞாயிறு தினங்களில் கம்பஹாவில் நடைபெற்ற 47ஆவது தேசிய விளையாட்டுப் போட்டிகளில் சிறுவர்களுக்கான 5 கிலோ மீற்றர் தூரம்கொண்ட ஓட்டத்தில் ஆடவர் பிரிவில் மேல் மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி களமிறங்கிய மத்துகம, அளுத்கங்கொட மகா வித்தியாலய மாணவன் கே.கே.லகிந்து முதலிடத்தைப் பிடித்து வெற்றியாளரானார்.

மகளிர் பிரிவில் வடமேல் மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி களமிறங்கிய சிலாபம் பங்கதெனிய தேசிய பாடசாலை மாணவி டபிள்யூ.எம்.புத்திமா அமாஷி முதலிடத்தைக் கைப்பற்றினார்.




# பைனா பிரிமியர் லீக் சம்பியனான பைனா ஸ்டார்



(றியாஸ் இஸ்மாயில்)

அட்டாளைச்சேனை பைனா விளையாட்டுக் கழகத்தின் 4 அணிகள் பங்கேற்ற பைனா பிரிமியர் லீக் - 2022 கிரிக்கெட் சுற்றுத்தொடர் அண்மையில் அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதில் பைனா ஸ்டார்ஸ் அணி 4 ஓட்டங்களால் வெற்றிபெற்று 15 ஆயிரம் பணப்பரிசுடன் வெற்றிக் கிண்ணத்தையும் தனதாக்கிக்கொண்டது.

தொடர்நாயகன் விருதை ஐ.ஹரீஸ், இறுதிப்போட்டியின் ஆட்டநாயகன் விருதை வை.பாயிஸ், சிறந்த பந்துவீச்சாளர் விருதை ஜே.நுஸ்ரி ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

கழகத்தின் தலைவர் கெப்டன் ஏ.சீ.எம்.றசாத் ஆசிரியர் தலைமையில் நடைபெற்ற இறுதி பரிசளிப்பு நிகழ்வில் பிரதம அதிதியாக பஸ்மா ரைல்ஸ் சென்றர் உரிமையாளர் மௌலவி எம்.ஐ.இஸ்ரத், கழகத்தின் முன்னாள் தலைவர் ஏ.கே.அஜ்வத் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



# பெரியநீலாவணையில் தீ விபத்து; மூன்று மர ஆலைகள் எரிந்து நாசம்





(பெரியநீலாவணை விசேட நிருபர்)

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட பெரியநீலாவணையிலுள்ள மரம் அரியும் ஆலையில் நேற்று (13) அதிகாலை 1.00 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக அருகருகே உள்ள மூன்று மரம் அரியும் ஆலைகள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன.

சம்பவத்தை அறிந்து ஸ்தலத்திற்கு வருகை தந்த இளைஞர்கள் மற்றும் கல்முனை மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினர் ஒன்றிணைந்து மேலும் தீ பரவுவதை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை பெரியநீலாவணை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

இந்தத் தீ விபத்து காரணமாக பல இலட்சம் ரூபா பெறுமதியான மரம் அரியும் கனரக மோட்டார் இயந்திரங்கள் உட்பட தொழிற்சாலையில் இருந்த மரக்குற்றிகள் மற்றும் மரத் தளபாடங்கள் என அனைத்தும் எரிந்து நாசமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மீன்பிடிக்கச் சென்று காணாமல்போன கல்முனை மீனவர்கள் 15 நாட்களுக்குப் பின் பாதுகாப்பாக மீட்பு

(பாறுக் ஷிஹான்)

கடந்த 15 நாட்களாக மீன்பிடிக்கச் சென்று திசைமாறி காணாமல்போனதாகக் கூறப்பட்ட 4 மீனவர்களும் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதாக அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.சி.முகம்மட் றியாஸ் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டம், கல்முனையிலிருந்து கடந்த 26, செப்டெம்பர் மாதம் ஆழ்கடல் மீன்பிடிக்குச் சென்ற 4 மீனவர்கள் 15 நாட்கள் கடந்தும் இன்னும் வீடு திரும்பவில்லை என்ற விடயம் தொடர்பாக கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

காணாமல்போன மீனவர்கள் அனைவரும் தற்போது மீட்கப்பட்டு சொந்த இடத்திற்கு அழைத்துவரப்பட்டுள்ளனர். கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட கடற்பரப்பிலிருந்து கடந்த 26.09.2022 அன்று மாலை புறப்பட்டுச் சென்ற



4 மீனவர்கள் குறித்து இதுவரை எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. இதுகுறித்து ஊடகங்களில் செய்தி வெளியாகி இருந்தது.

இதில் கல்முனையைச் சேர்ந்த எம்.ஐ.எம் மஜிட் (வயது 55), சி.எஸ்.எச்.எம்.நிப்றாஸ் (வயது 36 ), ஏ.பி.கபீர் (வயது 50), எம்.என்.ஹில்மி (வயது 33) ஆகிய மீனவர்களே குறித்த படகில் பயணம் செய்து காணாமல்போயிருந்தனர். அவர்கள் சென்ற படகின் ஜி.பி.எஸ். தொழில்நுட்பக் கருவி பழுதடைந்தமையினால் திசைமாறி பயணித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு திசைமாறி தத்தளித்த குறித்த படகை மீனவர் ஒருவர் கண்டு கடற்படையினருக்கு அறிவித்துள்ளார். இதற்கமைய மீட்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, காணாமல்போன 4 மீனவர்கள் உள்ளிட்ட படகு வாழைச்சேனை துறைமுகத்திற்கு இழுத்து வரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் மீட்கப்பட்ட மீனவர்கள் அனைவரும் மருத்துவ பரிசோதனையின் பின்னர் வீடுகளுக்கு செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இம்மீட்பு நடவடிக்கையில் கடற்படை மீன்பிடித் திணைக்களம், அம்பாறை மாவட்ட ஆழ்கடல் படகுகள் சங்கம் உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் சாம்பல் தீவு களப்புக்கு களவிஜயம்





(கிண்ணியா நிருபர்)

சாம்பல் தீவு களப்புக்கான களவிஜயம் ஒன்றினை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று முன்தினம் (12) மேற்கொண்டார்.

சாம்பல் தீவு கழிமுகத்திலிருந்து ஒட்டு மொத்தக் களப்பும் உள்ளடங்கும் வகையில் இரண்டு பக்கமும் நீர் வெளியேறுகின்ற பிரதேசத்திலிருந்து 500 மீற்றர் வரையிலான பகுதியை மீன்பிடித் திணைக்களத்தின் முகாமைத்துவத்திற்குட்பட்ட பிரதேசமாக மாற்றியமைப்பதற்கும் அப்பிரதேசம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களை வனஜீவராசிகள் திணைக்களம் உட்பட ஏனைய திணைக்களங்களின் பராமரிப்பின் கீழ் கொண்டுவருவதற்கும் துறைசார் நிறுவனங்களை இணைத்து செயற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து இதன்போது அமைச்சர் தெளிவுபடுத்தினார்.

இதுதொடர்பில் உரிய அமைச்சுகளோடு தொடர்புகொண்டு கலந்துரையாடல்களை மேற்கொண்டு மீனவர்களின் சாதகமான விடயங்களுக்குத் தீர்வு வழங்கப்படும் என்றும் களப்புக்கும் மீனவர்களுக்கும் எந்தவித பாதிப்புகளும் ஏற்படாத அடிப்படையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவிருப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் உரிய திணைக்களத்தின் அதிகாரிகள், மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கரடியனாறு, புலிபாய்ந்தகல் பகுதிகளில் துப்பாக்கி - வெடிபொருட்கள் மீட்பு!





(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, கரடியனாறு மற்றும் சந்திவெளி பொலிஸ் பிரிவிலுள்ள சின்ன புல்லுமாலையில் புதைத்து வைக்கப்பட்டிருந்த வெடிமருந்துகளையும். புலிபாய்ந்தகல் காட்டுப்பகுதியிலிருந்து ரி56 ரக துப்பாக்கி ஒன்று மற்றும் அதற்கான ரவைகளை நேற்று முன்தினம் (12) மாலை விசேட அதிரடிப்படையினரும் பொலிஸாரும் மீட்டுள்ளதாக அந்தந்த பொலிஸ் நிலையப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை கடதாசி ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் சந்திவெளி பொலிஸ் பிரிவிலுள்ள கோரவெளி காட்டுப்பகுதியில் சம்பவதினமான நேற்று முன்தினம் (12) மாலை களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படையினருடன் இராணுவ புலனாய்வுப் பிரிவினர் குறித்த காட்டுப்பகுதியில் மறைத்துவைக்கப்பட்டிருந்த ரி56 ரக துப்பாகி ஒன்றும் 8 ரவைகளையும் மீட்டனர்.

இதேவேளை, கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள சின்ன புல்லுமலை வயல்பகுதியில் உழவு இயந்திரத்தால் வயலை உழுதபோது பெரல் ஒன்றின் மூடி வெளியே வந்த நிலையில், நிலத்தை தோண்டியபோது நிலத்தில் புதைத்துவைக்கப்பட்ட பெரல் ஒன்றில் வெடிபொருட்கள் இருப்பதைக் கண்டு பொலிஸாருக்கு தெரியப்படுத்தினர்.

இதனையடுத்து பொலிஸார் பெரலிலிருந்து பாதுகாப்பாக பொலித்தீனில் சுற்றப்பட்ட பெருமளவிலான வெடிமருந்துகளை மீட்டுள்ளனர்.

இந்தப் பகுதி முன்னர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதி என்பதுடன், மீட்கப்பட்ட வெடிமருந்துகளை நீதிமன்ற உத்தரவைப் பெற்று செயலிழக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

# கிழக்கு ஆளுநர் அனுராதா யஹம்பத் லாகுகல வைத்தியசாலைக்கு விஜயம்



கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் அம்பாறை மாவட்ட லாகுகல பிரதேச வைத்தியசாலைக்கு நேற்று முன்தினம் (12) திடீர் கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டு அங்குள்ள நிலைமைகளை நேரடியாக பார்வையிட்டு குறைபாடுகள் பற்றி கேட்டறிந்தும் கொண்டார்.

வைத்தியசாலையை அண்டியுள்ள பிரதேசத்தில் அதிகமான யானைகளின் நடமாற்றம் இருப்பதால் வைத்தியசாலையைச் சுற்றி யானை வேலி அமைப்பதற்குத் தேவையான பணிகளை உடனடியாக துரிதப்படுத்துமாறு உரிய அதிகாரிகளுக்கு ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

இந்த விஜயத்தின்போது, மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்நாயக்க, ஆளுநர் செயலக செயலாளர் எல்.பி.மதநாயக்க, மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவர் சாமர நிலங்க ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

# போடியார் புலம்பல்!



***நோர்வே நரி எரிக்சொல்ஹைம்முக்கு இலங்கை நரி ரணில் சர்வதேச ஆலோசகர் பதவி வழங்கி இருக்காராமே?***

***சோக்கான ஆளுக்குத்தான் சோக்கான வேலய வழங்கி இருக்காரு.***

***சர்வதேச நரியும், உள்நாட்டு நரியும் சேர்ந்திருக்கு ஆர கவுக்கப்போறாங்களோ தெரியாது .. .. புலம்பெயர் தமிழருக்கு வல வீசத்தான் இந்த தந்திரம் எலுவா.?***

# காணாமற்போனோரைக் கண்டறியும் அலுவலகம் களுவாஞ்சிக்குடியில் விசாரணைகளை முன்னெடுப்பு

(மட்டக்களப்பு நிருபர்)


மண்முனை தென்எருவில்பற்று களுவாஞ்சிக்குடியில் காணாமல்போனோரின் அலுவலக அதிகாரிகளினால் காணாமல் போனோரின் உறவினர்களிடம் நேற்று முன்தினம் (12) விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.


மண்முனை தென்எருவில்பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற விசாரணைகளின்போது மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகப் பிரிவிலிருந்து 75 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டு, விசாரணைகள் இடம்பெற்றுள்ளன.

காணாமல்போனோரின் உறவினர்கள் முன்வைக்கும் கோரிக்கைகளுக்கு அமைவாக அவர்களுக்குத் தேவையான உதவிகளை மேற்கொள்வதற்கு காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் பரிந்துரை செய்யும் என இதில் கலந்துகொண்ட அதிகாரி ஒருவரினால் கருத்து தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# கிண்ணியா வலய பாடசாலைகளுக்கு இம்ரான் மஹ்ரூப் எம்.பி. திடீர் விஜயம்





(கந்தளாய் நிருபர்)

கிண்ணியா கல்வி வலயத்திற்குட்பட்ட சில பாடசாலைகளுக்கு திடீர் விஜயம் மேற்கொண்டு பாடசாலைகளின் தேவைகளை திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கேட்டறிந்தார்.

கிண்ணியா கல்வி வலயத்திற்குட்பட்ட கிண்ணியா மத்திய கல்லூரி தேசிய பாடசாலை, அல்-ஹிரா முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலயம், நடுத்தீவு அல் இக்பால் ஆகிய பாடசாலைகளுக்கு விஜயம்செய்து அங்குள்ள பிரச்சினைகளை கேட்டறிந்துகொண்டார்.


கிண்ணியா மத்திய கல்லூரி தேசிய பாடசாலைக்கு விஜயம் செய்து ஜனவரி 31ஆம் திகதியுடன் ஓய்வுபெறும் அதிபர் எஸ்.எம்.அனிபா அவர்களது சேவைகளை பாராட்டி, வாழ்த்துகளை தெரிவித்துக்கொண்டார்.


கிண்ணியா அல்-ஹிரா முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலயத்திற்கு விஜயம் செய்தபோது தங்கள் பாடசாலையில் உயர்தர விஞ்ஞானப் பிரிவினை ஆரம்பிப்பதற்கான அனுமதியினை பெற்றுத்தருமாறு அதிபர் ஜனாப். எம்.எஸ்.நசூர்தீனால் கோரிக்கை விடுக்கப்பட்டது.


அடுத்ததாக கிண்ணியா நடுத்தீவு அல்-இக்பால் வித்தியாலயத்திற்கு விஜயம் செய்தபோது அப் பாடசாலை தரம் 09 வரை உள்ளதாகவும் அடுத்த ஆண்டிலிருந்து க.பொ.த. சாதாரண தர வகுப்புகளை (10, 11) நடத்துவதற்குரிய அனுமதியினை பெற்றுத்தருமாறும் பாடசாலை அதிபர் முகம்மட் உவைஸால் நாடாளுமன்ற உறுப்பினிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப், கிண்ணியா நடுத்தீவு இக்பால் வித்தியாலயம், கிண்ணியா அல்-ஹிரா மகா வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலை அதிபர்களாலும் விடுக்கப்பட்ட வேண்டுகோளை மிக விரைவில் நிறைவேற்றித் தருவதாக பாடசாலை அதிபர்களிடம் வாக்குறுதியளித்தார்.

# உன்னிச்சை இருநூறுவில் கிராமிய பாலம் திறந்துவைப்பு







(மட்டக்களப்பு நிருபர்)

வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட உன்னிச்சை செல்லும் பிரதான பாதையில் அமைந்துள்ள இருநூறுவில் கிராமிய பாலம் இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தனால் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

மிக மோசமான நிலையில் சிதைவடைந்து காணப்பட்ட மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட உன்னிச்சை செல்லும் பிரதான பாதையில் அமைந்திருந்த இருநூறுவில் பாலத்தினை புனரமைக்க வேண்டுமென அப்பகுதி பிரதேச வாசிகள் கிராமிய மற்றும் பிரதேசமட்ட குழுக்களினூடாக விடுத்த வேண்டுகோளுக்கமைய சுமார் 15.3 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட பாலமே இராஜாங்க அமைச்சினால் மக்கள் பாவனைக்காக சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இருநூறுவில் கிராமியப் பாலமானது மிக மோசமாக நிலையில் சிதைவடைந்து காணப்பட்டமையினால் உற்பத்தியாளர்களும், விவசாயிகளும் அறுவடைக் காலங்களில் தமது உற்பத்திகளை எடுத்துச்சென்று உரிய முறையில் சந்தைப்படுத்த முடியாத துர்ப்பாக்கிய நிலையும், பாடசாலை மாணவர்கள் உட்பட பிற தேவைகள் கருதி குறித்த பாலத்தினை பயன்படுத்துவோரும் பாரிய சிரமத்தை எதிர்நோக்க வேண்டிய சூழலும் தோற்றம் பெற்றிருந்தது. தற்போது அந்நிலைமை முழுமையாக மாறியுள்ளமை மனதிற்கு மிகவும் மகிழ்ச்சியளிப்பதாக குறித்த நிகழ்விற்கு பிரதம அதிதியாக கலந்து கொண்டு பாலத்தினை திறந்துவைத்த இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் இதன்போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதம பொறியியலாளர் பரதன், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிறைவேற்று பொறியியலாளர் லிங்கேஸ்வரன், தொழில்நுட்ப உத்தியோகத்தர் நந்தகோபன் உட்பட இப்பால வேலைகளை திறம்பட முடித்துக் கொடுத்துள்ள சது கன்ஸ்ட்ரக்ஷன் உரிமையாளர் சுரேஷ்குமார், சது கன்ஸ்ட்ரக்ஷன் மேற்பார்வையாளரான கோடீஸ்வரன், இருநூறுவில் பிரதேச விவசாய அமைப்பின் தலைவர் சித்தானந்தன், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் வவுணதீவு பிரதேச அமைப்பாளர் நித்தீஸ்வரன் உட்பட தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முக்கியஸ்தர்கள், பொதுமக்களென பலரும் கலந்துகொண்டுள்ளனர்.



# ரஷ்யாவுக்கு எதிராக ஐ.நாவில் கண்டனத் தீர்மானம்

## இலங்கை உட்பட 35 நாடுகள் புறக்கணிப்பு

## 143 நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றம்




உக்ரைன் போர் காரணமாக ரஷ்யாவுக்கு எதிராக ஐ.நா. சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் நிறைவேறியது. தீர்மானத்திற்கு ஆதரவாக 143 நாடுகளும், எதிராக 5 நாடுகளும் வாக்களித்துள்ளன. மேலும் இலங்கை மற்றும் இந்தியா உட்பட 35 நாடுகள் வாக்கெடுப்பை புறக்கணித்துள்ளன.

நேட்டோ கூட்டமைப்பில் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த பெப்ரவரி மாதம் 24ஆம் திகதி உக்ரைன் மீது ரஷ்யா போர்த் தொடுத்தது. இப்போர் இன்று 8 மாதங்களைக் கடந்து 232ஆவது நாளாகவும் தொடர்ந்தும் நீடித்து வருகிறது. போரால் உக்ரைன் தலைநகர் கீவ் மற்றும் இரண்டாவது பெரிய நகரான கார்கீவ், தொழில்நகரான மரியுபோல் உள்ளிட்ட பல்வேறு நகரங்கள் உருக்குலைந்துள்ளதுடன், 13.7 மில்லியன் பேர் உக்ரைனிலிருந்து வெளியேறி அண்டைநாடுகளில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர்.

மேலும், போரால் உக்ரைனின் பல்வேறு நகரங்களை ரஷ்யா தமது கட்டுப்பாட்டின் கொண்டுள்ளது. அந்தவகையில் ரஷ்யா தமது ஆக்கிரமிப்பின்கீழ் கொண்டுவந்த டோனெட்ஸ்க், லுஹான்க்ஸ், கெர்சன் மற்றும் ஷபோரிஸ்சியா ஆகிய நான்கு பிராந்தியங்களை தன்னுடன் இணைத்துக்கொள்ள திட்டமிட்ட ரஷ்யா, இது தொடர்பாக பொது வாக்கெடுப்பை மேற்கொண்டது. பின்னர் அந்த போலி வாக்கெடுப்பில் வெற்றிபெற்றதாகத் தெரிவித்து குறித்த 4 பிராந்தியங்களை தன்னுடன் இணைத்துக்கொண்டது.

ஆனால், சர்வதேச சட்டத்தை மீறும் செயல் இது என உலக நாடுகள் கண்டனம் தெரிவித்தன. ரஷ்யாவைக் கண்டித்து ஐ.நா. சபையில் தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

முன்னதாக இந்தத் தீர்மானத்தின் மீது இரகசிய வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று ரஷ்யா ஐக்கிய நாடுகள் சபையில் கோரிக்கை வைத்தது. ரஷ்யாவின் இந்தக் கோரிக்கையை ஏற்பதா, வேண்டாமா என ஐ.நா. சபையில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

அப்போது இந்தியா மற்றும் இலங்கை உட்பட 107 ஐ.நா. உறுப்புநாடுகள் ரஷ்யாவுக்கு எதிராக வாக்களித்தன. இதனால் ரஷ்யாவின் இரகசிய வாக்கெடுப்பு கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ரஷ்யாவுக்கு கண்டனம் தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பு நடைபெற்றது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற வாக்கெடுப்பில் தீர்மானத்திற்கு ஆதரவாக 143 நாடுகள் வாக்களித்தன. பெலாரஸ், வடகொரியா, நிகரகுவா, ரஷ்யா மற்றும் சிரியா உள்ளிட்ட 5 நாடுகள் தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்து தங்கள் எதிர்ப்பைப் பதிவுசெய்துள்ளன.

இந்தியா உட்பட 35 நாடுகள் வாக்கெடுப்பில் பங்கேற்காமல் புறக்கணித்துள்ளன.

அதேநேரத்தில் உக்ரைனில் அப்பாவி மக்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களுக்கு இந்தியா கண்டனத்தைப் பதிவுசெய்துள்ளது. போர் மூலமாக அல்ல, பேச்சு மூலமே தீர்வு காணப்பட வேண்டும் என்றும் இந்தியா வலியுறுத்தியது.

### ரஷ்யாவின் பிடியிலிருந்து 5 நகர்ப்புறங்கள் விடுவிப்பு

ரஷ்யாவின் பிடியிலுள்ள கெர்சன் பிராந்தியத்தின் 5 நகர்ப்புறங்களை உக்ரைன் மீண்டும் கைப்பற்றியுள்ளது.

இதன்படி கெர்சனின் நோவோவாசிலிவ்கா, நோவோரிஹோரிவ்கா, நோவா கம்யங்கா, டிரைபோனிவ்கா மற்றும் செர்வோன் ஆகிய 5 நகர்ப்புறங்களை உக்ரைன் இராணுவம் மீட்டுள்ளது.

இதனிடையே, கிரீமியா பாலம் வெடித்தது தொடர்பாக சந்தேகத்துக்குரிய 8 பேரை கைது செய்திருப்பதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

# உலக செய்திகள்

## ஆங் சான் சூகிக்கு மேலும் 3 ஆண்டுகள் சிறைத்தண்டனை



மியன்மாரில் ஜனநாயகம் திரும்பக்கோரி போராட்டம் நடத்திய ஆங் சான் சூகிக்கு ஊழல் வழக்கில், அந்நாட்டு இராணுவ நீதிமன்றத்தால் மேலும் 3 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ள ஆங் சான் சூகிக்கு இதுவரை 12 வழக்குகளில் 23 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தொழிலதிபர் ஒருவர் 5 மில்லியன் டொலர் இலஞ்சம் வழங்கியதாக தெரிவித்த குற்றச்சாட்டின்மீது தொடுக்கப்பட்ட வழக்கில் தற்போது மேலும் 3 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இதையும் சேர்த்து, மொத்த சிறைத்தண்டனை 26 ஆண்டுகளாக அதிகரித்துள்ளது.

## தேவாங்குக்கு சரணாலயம் அமைக்கும் தமிழகம்



இந்தியாவின் முதல் தேவாங்கு சரணாலயம் தமிழகத்தின் கரூர், திண்டுக்கல் மாவட்டங்களுக்கு இடைப்பட்ட கடவூரில் அமைக்கப்படவுள்ளதாக தமிழக அரசு அறிவித்துள்ளது.

அழிந்துவரும் தேவாங்கு இனத்தைப் பாதுகாக்கும் நோக்கில், தேவாங்குகளின் முக்கிய வாழ்விடங்களாக அடையாளம் காணப்பட்டுள்ள 11,806 ஹெக்டேயர் பரப்பளவிலுள்ள வனப்பகுதியில் தேவாங்கு சரணாலயம் அமைக்கப்படவுள்ளது.

## கராச்சியில் ஓடும் பஸ்ஸில் தீ:

### குழந்தைகள் உட்பட 21 பயணிகள் உடல் கருகி உயிரிழப்பு; 28 பேர் காயம்



பாகிஸ்தானின் கராச்சி அருகே ஓடும் பஸ்ஸில் தீப்பிடித்ததில் குழந்தைகள் உட்பட 21 பயணிகள் உடல்கருகி உயிரிழந்துள்ளதுடன், 28இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

அண்மையில் பாகிஸ்தானில் பெய்த கனமழையால் பெரும்பாலான மாவட்டங்கள் வெள்ளத்தால் மூழ்கின. இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் மீட்கப்பட்டு கராச்சியில் தங்கவைக்கப்பட்டனர். வெள்ள பாதிப்பு குறைந்ததால் கராச்சியிலிருந்து 60இற்கும் மேற்பட்டோர் ஹைதராபாத் நோக்கி பஸ்ஸில் அழைத்துச் சென்றனர்.

கராச்சியிலிருந்து ஹைதராபாத் நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பஸ், நூரியாபாத் அருகே எயார் கண்டிஷன் யூனிட்டில் திடீரென தீப்பிடித்தது. இதையடுத்து பஸ் வீதியில் நிறுத்தப்பட்டது. பயணிகள் சிலர் கண்ணாடிகளை உடைத்துக்கொண்டு பஸ்ஸிலிருந்து கீழே குதித்துத் உயிர்த் தப்பினர்.

எனினும், பஸ்ஸுக்குள் தீ விரைந்து பரவியதால், கீழே இறங்க முடியாமல் சிக்கிக் கொண்ட 21 பேர் உடல்கருகி பலியாகினர். மேலும், பலர் தீக்காயங்களுடன் அருகிலுள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் குழந்தைகள் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியாவில் பரபரப்பு

## தோண்டும் இடமெல்லாம் மனித எலும்புக்கூடுகள் மீட்பு

### இதுவரை 100 குழந்தைகள் உட்பட 240 பேரின் எலும்புக்கூடுகள் கண்டெடுப்பு



பிரித்தானியாவிலுள்ள டிபார்ட்மெண்ட் ஸ்டோரின் அத்திவாரத்தில் 100இற்கும் மேற்பட்ட குழந்தைகள் உட்பட 240 பேரின் எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டன.

ஹாவர்ஃபோர்ட்வெஸ்ட்-ல் ஓக்கி ஒயிட் கட்டடத்தின் மேம்பாட்டுப் பணியின்போது, தோண்டிய இடமெல்லாம் மனித எலும்புக்கூடுகள் கிடந்தன.

2013ஆம் முதல் செயற்பாட்டில் இல்லாத அந்தக் கட்டடத்தின் அடியில் கைப்பற்றப்பட்ட எலும்புக்கூடுகளில் தலை உள்ளிட்ட பகுதிகளில் காயங்கள் ஏற்பட்டுள்ளதைக் கண்டறிந்த ஆராய்ச்சியாளர்கள், போர்க் காயங்களுடன் ஒத்துப்போனதால், 1405ஆம் ஆண்டில் மன்னர் ஓவைன் க்ளின்டர் தலைமையிலான பிரெஞ்சு மற்றும் வெல்ஷ் படைகளின் தாக்குதலால், இவர்கள் பலியாகி புதைக்கப்பட்டிருக்கலாம் என்று தெரிவித்தனர்.

மேலும், பிரித்தானிய வரலாற்றில் இதுவரை இவ்வளவு பெரிய புதைகுழியை பார்த்ததில்லை. கிட்டத்தட்ட 18ஆம் நூற்றாண்டு வரை இந்த இடம் சுடுகாடாக இருந்திருக்க வாய்ப்புள்ளது. எதிர்வரும் ஜனவரி வரை தொடர்ந்து ஆய்வுகள் நடத்தப்படுமென ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## இனி ஆடு - மாடு ஏப்பம் விட்டாலும் வரி

### நியூசிலாந்து அரசு திட்டவட்டம்



புவி வெப்பமயமாதலை கட்டுப்படுத்த தனித்துவமான திட்டமொன்றை கையில் எடுத்துள்ளது நியூசிலாந்து அரசு. அதன்படி ஆடு, மாடுகள் உள்ளிட்ட பண்ணை விலங்குகள் ஏப்பம் விடுவதற்கும், சிறுநீர் கழித்தல் உள்ளிட்டவற்றுக்கும் தனியாக வரி விதிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பான விவாதம் இந்த ஆண்டு துவக்கத்தில் இருந்தே நடந்துவந்த நிலையில், தற்போது இது பெரும் சர்ச்சையாகியுள்ளது. "என்னங்க.. இது ஆடு, மாடுகள் ஏப்பம் விடுவதற்கும், சிறுநீர் கழிப்பதற்குக்கூட வரியா?" என அந்நாட்டு விவசாயிகள் கேள்வியெழுப்பியுள்ளதுடன், தமது எதிர்ப்பையும் பதிவுசெய்து வருகின்றனர்.

இருப்பினும் நியூசிலாந்து அரசு தனது நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளது. அதன்படி 'பர்ப்பிங்' என்ற பெயரில் ஆடு, மாடுகளுக்கான ஏப்பத்துக்கு வரியும், 'பீயிங்' என்ற பெயரில் ஆடு, மாடு உள்ளிட்ட கால்நடைகள் சிறுநீர் கழிப்பதற்கும் வரி விதிக்க முடிவு செய்துள்ளது.

இதற்கான வரைவு திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது. இருப்பினும், இந்தத் திட்டத்தின் கீழ் ஏப்பம், சிறுநீர் கழித்தலுக்கான வரி எவ்வளவு என்பது இன்னும் குறிப்பிடப்படாத நிலையில், இத்திட்டத்தின் மூலம் விவசாயிகள் 2025இல் வரி செலுத்தத் தொடங்குவார்கள். பணம் செலுத்தத் தொடங்குவார்கள் என கூறப்படுகிறது.

பொதுவாக ஆடு, மாடுகள் ஏப்பம் விடும்போது அதன் வாயிலிருந்து மீத்தேன் வாயு வெளியேறுகிறது. மீத்தேன் என்பது கார்பன்டை ஒக்சைடை விட 25 மடங்கு அதிக வெப்பத்தை ஏற்படுத்தும். இதனால்தான் மீத்தேன் வெளியேற்றத்தைக் குறைப்பது மிகவும் முக்கியமான ஒன்றாக உள்ளது. அதேபோல் சிறுநீரிலிருந்து நைட்ரஸ் ஒக்சைட் வெளியேறுகிறது. இவை இரண்டும் பூமி வெப்பமயமாதலுக்கு முக்கிய காரணமான பசுமை இல்ல வாயுக்களாகும். இதனால் தான் மாடு உள்ளிட்ட பண்ணை விலங்குகளின் 'பர்ப்ஸ்' மற்றும் 'சிறுநீர்' கழித்தலுக்கு வரி விதிப்பதற்கான வரைவு மசோதாவை நியூசிலாந்து அரசு முன்மொழிந்துள்ளது. இந்தத் திட்டம் உண்மையில் பசுமை இல்ல வாயுக்களின் உமிழ்வை குறைக்க உதவும் எனக் கூறப்படுகிறது.

இதேவேளை, நியூசிலாந்து இன்னொரு பிரச்சினையை சந்திக்கலாம். ஏனென்றால், நியூசிலாந்தின் மொத்த மக்கள் தொகை என்பது வெறும் 50 இலட்சம்தான். இங்கு ஒரு கோடிக்கும் அதிகமான மாடுகளும், 26 மில்லியன் (ஒரு மில்லியன் என்பது 10 இலட்சம்) செம்மறி ஆடுகளும் உள்ளன. இதனால் விவசாயம், கால்நடை வளர்ப்பு மற்றும் பால் மூலம் கிடைக்கும் பொருட்களின் பொருளாதாரத்தைத்தான் நியூசிலாந்து சார்ந்துள்ளது. குறிப்பாக, பால் பொருட்கள் ஏற்றுமதிதான் நியூசிலாந்தின் பொருளாதாரத்துக்கு முக்கியமான மூலாதாரமாக உள்ளது. இந்தச் சூழலில் ஆடு, மாடுகளின் ஏப்பத்துக்கு வரி விதிப்பது என்பது அந்த நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிக்கலாம் எனக் கூறப்படுகிறது. அதாவது வரிக்கு பயந்து விவசாயிகள் கால்நடை வளர்ப்பை கைவிடும் பட்சத்தில் நாட்டின் பொருளாதாரம் மிகவும் அதிகமாக பாதிக்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## வானில் பறந்துகொண்டிருக்கும்போது திடீரென கழன்று வீழ்ந்த விமானச் சக்கரம்



இத்தாலியிலுள்ள Taranto-Grottaglie விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட சரக்கு விமானத்திலிருந்து முக்கிய சக்கரமொன்று கழன்று கீழே விழுந்ததால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

போயிங் 787 ட்ரீம்லைனர் உதிரிப்பாகங்களைக்கொண்டு செல்வதற்குப் பயன்படுத்தப்படும் Boeing 747 ரக சரக்கு விமானம் இத்தாலியிலுள்ள டரன்டோவிலிருந்து புறப்பட்டு, அமெரிக்காவின் சார்லஸ்டனில் நகருக்கு செல்லவிருந்தது.

ட்ரீம்லிஃப்டரின் தரையிறங்கும் கியர் பகுதியிலிருந்த சக்கரங்கள் தரையிலிருந்து சில மீற்றர்கள் உயரத்தில் பறந்துகொண்டிருக்கும் போது கழன்று கீழே விழுந்தது. இதனால் விமான நிலைய ஊழியர்கள் அதிர்ச்சியடைந்தனர். இதை அங்கிருந்த ஊழியர் ஒருவர் தனது செல்போனில் பதிவு செய்துள்ளார். பின்னர் முறையான தகவல் கொடுத்து விபத்தின்றி விமானம் வட கரோலினாவிலுள்ள சார்ள்ஸ்டன் பகுதியில் பாதுகாப்பாக தரையிறக்கப்பட்டது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7